Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00


# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU


Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 17 வெள்ளிக்கிழமை (01.07.2011) பக்கங்கள் 16 ஓசை – 275


செய்திகளால் சீரழியும் பெண்கள் 03


அரசாங்கம் சிங்கள மக்களின் ஏகப்பிரதிநிதியா? 08


தொட்டுப் பார்க்க 1000 டொலர்கள் 11


கண்ணீருடன் விடைபெற்ற நயன்தாரா 12

# கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே மோதல்
# யாழ்.மாநகரசபைக் கூட்டத்தில் அடிதடி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் எதிர்க் ட்சி உறுப்பினர்கள் இருவர் நவருடன் ஒருவர் மோதிக் காண்டுள்ளனர். எதிர்க்கட்சித் லைவர் யார் என்பது குறித்த விப் போட்டியே நேற்றைய னம் உச்சக்கட்ட மோதலில் டிவடைந்திருக்கிறது.

யாழ்.மாநகர சபையின் இந்த ஆண்டுக்கான ஆறாவது கூட்டத் தொடர் நேற்றுக்காலை ஆரம்ப மாகியது. எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்ற அழைக்கப்பட்ட போது தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு உறுப்பினர் முடியப்பு றெமிடியஸ உரை நிகழ்த்த எழுந்தபோது மோதல் வெடித் தது. கூட்டமைப்பைச் சேர்ந்த பரஞ்சோதி எதிர்க்கட்சித் தலை வர் யார் என்ற சர்ச்சையைக் கிளப்பினார். இதனைத் தொடர் ந்து மோதல் சூடுபிடித்தது.

பரஞ்சோதியை நோக்கி றெமிடியஸ் கடும் வார்த்தை களை வீசினார். நாகரிகமற்ற சொற்கள் தாராளமாக இருந் தன. பரஞ்சோதியும் பதிலுக்கு தகாத வார்த்தைகளைப் பிர யோகித்தார். ஒரு கட்டத்தில் தண்ணீர்ப் போத்தலைத் தூக் கிப் பரஞ்சோதி மீது வீசியெறிந் தார் றெமிடியஸ். மோதல் உச் சக்கட்டத்தை அடைந்தபோது மற்றொரு கூட்டமைப்பு உறுப்பி னரான விந்தன் கனகரத்தினம் இருவரையும் தடுத்தார். இதனால நேற்றைய அமர்வு கூச்சலும் குழப்பமுமாக நடந்தேறியது.


கூட்டமைப்பின் ஆளுகைக் குட்பட்ட வவுனியா நகரசபை யில் இதேபோன்று உட்கட்சி உறுப்பினர்களுடன் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக அச்சபை செயலிழந்துபோனது வாசகர் களுக்கு நினைவிருக்கும்.

யாழ். மாநகர சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர் மீது தாக் குதல் நடத்தினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர் முடியப்பு றெமிடியஸ் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் ஆளும் கட்சி, எதிர்கட்சி உறுப்பினர்கள் சேர்ந்து தீர்மானித்துள்ளதாக மேயர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் தண்ணீர்ப் போத்தலால் தனது கட்சி உறுப்பினரைத் தாக்கிய துடன் அநாகரியமான வார்த் தைப் பிரயோகங்களை மேற் கொண்டதான குற்றச் சாட்டுக்களின பேரிலேயே அவர் மீது ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கப்ப டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.







## பொலிஸ் மா அதிபராக இளங்ககோன் நியமனம்

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ் மா அதிபர ஹிந்த பாலசூரிய ஓய்வு பெற் தைத் தொடர்ந்து சிறிது காலம் தில் பொலிஸ் மா அதிபராக டமை புரிந்த என்.கே.இளங்க கான புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படுவதற் ான அங்கீகாரத்தை அமைச்ச வை வழங்கியுள்ளது.

1970களின் பிற்பகுதியில் பாலிஸ் திணைக்களத்தில் ணைந்த என்.கே.இளங்க கான் 1982 ஆம் ஆண்டு உதவிப் பாலிஸ் அத்தியட்சகர் பரீட் சயில் சித்தியடைந்தார்.

விசேட அதிரடிப்படையில் வையாற்றிய அவர் அநுராத



புரத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரா கவும் கடைமையாற்றியுள்ளார்.

இலங்கை பொலிஸ் திணைக் களத்தின் 33 ஆவது பொலிஸ் மா அதிபராக இவர் நேற்றுப் பொறுப்பெற்றுள்ளார்.

## கடல் உணவு விலை யாழ்.நகரில் சரிவு

யாழ்.நகரில் கடலுணவின் விலைகள் திடீரென வீழ்ச்சி யடைந்துள்ளது. குருநகர், கொட்டடி போன்ற மீன் சந்தை யில் விலைகள் சரிந்துள்ளன.

குருநகர்ப் பகுதி மீனவர்கள தற்போது ரோலர் இழுவைப் படகு மூலம் மீன் பிடிக்கக் கட லுக்குச் செல்வதால் கடலுணவு கள் அதிகளவில் பிடிபடுவ தாக மீனவர்கள் தெரிவித்தனர்.(வி)

## குடா நாட்டில் தென்னை அபிவிருத்தி தென்மராட்சியில் இன்று செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்னை அபிவிருத்தி அதிகார சபையினால், "கப்பு காபுரவ" என்ற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விசேட செய லமர்வு ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் அமைந்துள்ள தென் மராட்சி கலாசார மண்டபத்தில் நடைபெறும் இக் கலந்து ரையாடலில் அமைச்சர்களான ஜெகத் புஸ்பகுமார, கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகி யோர் கலந்துகொள்ளவுள் ளனர். (11)

## ...தியோர் இல்லத்தில் அன்பளிப்பு


(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத் ல் தங்கியிருக்கும் முதியவர் ளுக்கு வெளியிடங்களில் இருந்து வரும் மக்கள் உணவுப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கி வருகின்றனர்.

சிற்றுண்டிப் பொருட்கள் மற்றும் பழவகைகள் என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றன என்று இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன. (வி)

# தேவையற்ற அதிகாரங்களை தமிழர்கள் கோரக்கூடாது

## பொன்சேகாவின் புதிய தத்துவம்



(கொழும்பு)

தமிழர்கள் தேவையற்ற அதி காரங்களைக் கோராமல் சிங்கள வர்களுடன் இணைந்து வாழப் பழகவேண்டும் என்று சரத் பொன்சேகா வலியுறுத்தி யுள்ளார். சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக் கப்பட்டதற்கு எதிரான வழக்கு விசா ரணையில் சமூகமளிப்பதற்காக நேற்று முன்தினம் நீதிமன்றத் துக்கு வந்து திரும்பிச்செல்லும் வழியில் ஊடகவியலாளர்களிடம் ஓரிரண்டு (15ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் வங்கியை மனதார வாழ்த்துகின்றோம்
நாட்டு மக்களின் மனமறிந்து பணிகள் செய்து, 50 ஆவது ஆண்டு பொன் விழாக் காணும் மக்கள் வங்கியின் ஆளுமை மிக்க செயற்பாடுகள் மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

# அவலங்களை விற்பனை செய்து நாம் அரசியல் நடாத்தவில்லை

## சந்திரகுமார் எம்.பி. பேச்சு


(கிளிநொச்சி)

சுயலாப அரசியலுக்காக எமது மக்களின் அவலங்களையும், துன்பங்களையும் விற்று அதில் அரசியல் நடத்துபவர்கள் நாம் அல்ல. மாறாக மக்களின் அவலங்களையும் துன்பங்களையும் நீக்கி அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக உழைப்பவர்களே நாம் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி-பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஜெயபுரம் கிராமத்தில் இரண்டு பொதுநோக்கு மண்டபங்கள் திறப்புவிழா மற்றும் வாழ்வாதாரக் கடன்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்களின் அவலங்களையும் துன்பங்களையும் விற்று அரசியல் நடாத்துவது என்பது இலகுவானது. அதனை எவரும் இலகுவில் செய்துவிட்டுப் போகலாம். அது இன்று அனைத்தையும் இழந்து பாதிக்கப்பட்டு வந்துள்ள எமது மக்களைப் பொறுத்தவரை அவர்களை மீண்டும் ஒரு இருண்ட காலத்திற்கே இட்டுச் செல்லும். ஆனால் அதுவல்ல எமது மக்களின் தேவை. அவர்களுக்கு வாழ்வாதார மேம்பாடும் அபிவிருத்தியுமே அவசிய தேவையாக உள்ளது. அதற்காகவே நாம் அரசில் அங்கம் வகிக்கின்றோம். அதன் மூலம் எமது மக்களின் வாழ்வில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்திக்கொடுக்க முடியும். ஏற்படுத்திக் கொடுத்தும் உள்ளோம் எனவும் தெரிவித்தார்.



ஜெயபுரம் பிரதேசத்தில் விவசாயம், உட்கட்டுமானம், வாழ்வாதாரம் போன்ற விடயங்களில் துரித அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதனை விட மக்களின் நீண்ட கால விருப்பாக இருந்த தேவன் குளமும் புனரமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் இப்பிரதேசம் விரைவில் அபிவிருத்தி நிறைந்த பிரதேசமாக மாற்றமடையும்.

இதனை விட பிரதேச செயலகத்தின் உப அலுவலகத்தையும் இங்கு முழுமையாக இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் மக்களின் சிரமங்கள் குறைக்கப்பட்டு இலகுவில் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் சந்திரகுமார் தெரிவித்தார்.

மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் ஜெயபுரம் வடக்குத் தெற்கில் இரண்டு பொது நோக்கு மண்டபம் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதோடு வாழ்வாதாரக் கடனுக்காக மொத்தம் 3915000 ரூபாவும் (முப்பத்தொன்பது இலட்சத்து பதினையாயிரம்) வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மீள் எழுச்சித் திட்ட பிரதிப் பணிப்பாளர் இராஜசுவேந்திரன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி திருமதி கல்யாணி, ஜெயபுரம் பிரதேச இராணுவ அதிகாரி மேஜர் விக்கிரமசிங்க, கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவர்கள், மாதர் அமைப்பின் தலைவர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.


## வலி.வடக்கில் அடிப்படை வசதிகள் நிக்கொட் நிறுவனம் நிதியுதவி

(கட்டுவன்)

தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஜே/228, ஜே/229, ஜே/221 ஆகிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள ப.நோ.கூட்டுறவுச் சங்க கிளைகளை புனரமைப்பதற்கு நிக்கொட் நிறுவனம் ஒரு தொகை நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதைவிட குறித்த நிறுவனம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் நீர் விநியோகத் திட்டத்திற்கும் மருந்து பெறும் கருவிகளுக்குமாக 3 மில்லியன் ரூபா நிதியினை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (22)

## முருகையன் நினைவுப் பேருரை



(யாழ்ப்பாணம்)

கவிஞர் கலாநிதி இ.முருகையன் நினைவுப் பேருரை நிகழ்வு நேற்று மாலை சிறப்பாக இடம்பெற்றது. நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து பயன்பெற்றனர்.


பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.க.கணபதிப்பிள்ளை, விரிவுரையாளர் ச.லலீசன், அதிபர் இ.குணநாதன், நீர்வை மணி ஐயா, ஆகியோர் உரையாற்றினர். த. நடராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் எது கவிதை என்ற தலைப்பில் விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் சிறப்புரையாற்றினார்.

## சிறைக்கைதி தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட கைதி நேற்றுக் காலை தப்பியோடியுள்ளதாக யாழ். சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நான்கு வருடமாக கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்.சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட 35 வயது மதிக்கத்தக்க கைதி ஒருவரே இவ்வாற



தப்பியோடியுள்ளார்.

இவர் நேற்று வலிற்றுவலி காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சிறைக்காவலர்களின் கண்காணிப்பில் இருந்து வந்த இவர் திடீரென யாழ். போதனா வைத்தியசாலையின் பின் மதிலில் ஏறிப் பாய்ந்து தப்பிச் சென்றுள்ளதாக யாழ் சிறைச்சாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.


### சிறு விளம்பரம்

#### வேலையாள் தேவை

சைக்கிள் திருத்த வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. தொடர்பு ப.விஜயகுமார் 217/3, கடைச்சந்தி, நீராவியடி, யாழ்ப்பாணம். சந்திக்கும் நேரம்: பி.ப 4.00 - பி.ப 5.30 (067)


## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 40 வருட கல்விச் சேவையிலிருந்து எஸ்.இராஜேந்திரன் ஓய்வுபெற்றுள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய இவருக்கு முல்லைத்தீவு - யோகபுரம் மகா வித்தியாலத்தில் நேற்றுமுன்தினம் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (12)

## பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் கல்லூரி அதிபர் க.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகும ா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வின் பரிசில்களை திருமதி ஜமுனா நந்தகுமார் வழங்கி கௌரவிப்பார். (109)

## கைதடியில் வங்கிக்கிளை

(சாவகச்சேரி)

ஹற்றன் நஷனல் வங்கியின் கைதடிக் கிளைத் திறப்பு விழா எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.50 மணியளவில் நடைபெறவுள்ளது.

கிளை முகாமையாளர் ப. பரணீதரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் இ.தியாகராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வங்கி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (11)

## நடுத்தெருவில் பெண்குழந்தையை தவிக்கவிட்ட தாயார் தலைமறைவு

(வவுனியா)

வவுனியா, குருமண்காடு பஸ்தரிப்பிடத்தில் நேற்று பகல் கைவிடப்பட்ட நிலையில், பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு வார பெண் குழந்தை தற்போது வவுனியா பொது வைத்திய சாலையில் பராமரித்து வருகின்றனர்.

குழந்தையின் தாயைத் தேடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். 2.9 கிலோ நிறை கொண்ட இந்த குழந்தை நல்ல தேக ஆரோக்கியத்துடன் உள்ளதாக வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் எஸ்.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (39)



## அபாயம் நிறைந்த வீதி பாதுகாப்பு எதுவுமற்ற பாலம்

(நல்லூர்)

கொக்குவில் கோவில் வீதியும் ஆடியபாதம் வீதியும் சந்திக்கும் இடத்திலுள்ள வெள்ளநீர் ஓடும் வாய்க்காலுடன் கூடிய பாலம் நீண்டநாட்களாக பராமரிப்பின்றிய நிலையில் காணப்படுவதால், இதனூடாக போக்குவரத்து செய்வது அபாயகரமானதாக காணப்படுவதாக அப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வெள்ளநீர் வடிந்தோடும் பாலத்தினுள் தற்போது பாரியளவிலான மரங்களும் பற்றைகளும் வளர்ந்து கவனிப்பாரற்று இருக்கும் இப்பாலத்தினூடாக போக்குவரத்தை மேற்கொள்வதால் விபத்துக்கள் ஏற்படும் நிலை காணப்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் எதிர்வரும் மழை காலத்தின்போது மழை நீர் ஓடுவது தடைப்பட்டு குடியிருப்பு பகுதிகளிற்கு வெள்ளநீர் செல்வதுடன் டெங்கு போன்ற பல்வேறு தொற்றுநோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீதிக்கும் பாலத்திற்குமிடையில் பாதுகாப்பாக இரும்புக் கேடர்களால் இப்பாலம் அமைக்கப்படவில்லை. இதனால் பாதுகாப்பற்ற பாலமாக இது காணப்படுகிறது.

அத்துடன் இப்பகுதியில் முன்பு ஏற்பட்ட விபத்துக்களின் போது ஒரு சில வாகனங்களும் இப்பாலத்தினுள் வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக கவனம் எடுத்து இப்பாலத்தினை முழுமையாகப் புனரமைத்து சிறந்த வடிகாலமைப்பு மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து என்பவற்றை ஏற்படுத்தி தருமாறு நல்லூர் பிரதேச சபையினரிடம் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (74)

## ஆசிரியர்களுக்கு புவியியல் செயலமர்வு

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை காலை 8.30 மணிமுதல் மாலை 3.30 மணி வரை யா/புலோலி மெ.மி.த.க பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பங்குபற்றும் ஆசிரியர்கள் புவியியல் பாட இலவச பாட நூல்களை எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (109)

புத்தக அறிவு மட்டும், பயன்தராது அது மேலோட்டமான அறிவு, ஆழ்ந்த பயன் தரக்கூடிய அறிவைத்தேடுங்கள் அதைக்கொண்டு புத்தியைப்பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

- பாலா.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஜெயலலிதாவின் கப்பல்!

முப்பது வருடங்களுக்கு முன், குமுதம் அரசு பதில்களில் அல்லது சாவி பதில்களிலாயிருக்க வேண்டும். எம்.ஜி.ஆர் ஆட்சி அமைத்து நூறு நாட்களில் எப்படி மதிப்பிடுகிறீர்கள்? என்ற கேள்விக்கு சொல்லப்பட்டிருந்த பதில் இது: "எம்.ஜி.ஆர் ஆட்சியை ஒரு கப்பலுக்கு ஒப்பிட்டால், அது இன்னும் விபத்துக்குள்ளாக வில்லை. காரணம், அது இன்னும் துறைமுகத்தை விட்டுப் புறப் படவே இல்லை."

எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசு ஜெயலலிதா, புதிய ஆட்சிப் பொறுப்பேற்று 45 நாட்கள் கழிந்த நிலையில், அதுபோன்ற ஒரு பதிலைச் சொல்ல முடியாது. உடனுக்குடனாகவே அவரிடமிருந்து சில அறிவிப்புகளும், தீர்மானங்களும், அதிரடியான நடவடிக் கைகளுமாக கப்பல் எடுத்த எடுப்பிலேயே வேகத்தைத் தொட்டி ருப்பதென்னவோ உண்மை!

குறிப்பாக இலங்கை தொடர்பான சட்டமன்றத் தீர்மானங்கள், கருணாநிதி காலத்து சமச்சீர்க் கல்வி தொடர்பான நீதிமன்றப் போராட்டம் ஆகியன அவரது 'நினைத்ததை முடிப்பவள்' தோற் றத்தை வெளிக்காட்டுவதாய் அமைந்தன.

இதைத்தவிர கலைஞர் காப்பீட்டுத் திட்டம், குடிசைகள் மாற் றுத்திட்டம், இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டம் முதலான பல்வேறு பழைய அரசின் திட்டங்களைத் தூக்கிக் கடாசியுள்ளார். அதுமட்டுமல்ல, ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்துக் கட்டப்பட்ட தலைமைச் செயலகத்தை, அது கருணா நிதி கட்டியது என்பதாலேயே அதைப் புறங்கையால் ஒதுக்கி விட்டுப் பழைய கோட்டைக்குள் புகுந்துள்ளார்.

ஜெயலலிதாவின் இந்த வேகம் ஜனநாயக உணர்வுடைய பலருக்கும் அவரது பழைய ஆட்சிக் காலத்தை நினைவுபடுத்திச் சற்றே நிலைகுலைய வைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்பதோடு நில்லாமல், கப்பல் போக்குவரத்தையும் நிறுத்த வேண்டும், கச்சதீவைத் திரும்பப் பெறவேண்டும் என்றெல்லாம் கேட்டிருக்கிறார். ஆனால், அந்தத் தீர்மானங்களின் மீது உரை யாற்றும்போது, புலிகள் பயங்கரவாதிகள் என்றும், அவர்களை இந்தியாவில் தடை செய்யத் தூண்டுதலாக இருந்தது தானே என்றும் அவர் பேசியிருக்கிறார்.

கருணாநிதியின் ஆதரவுத் தளங்களை உடைப்பதற்காகத் தமிழுணர்வாளர்கள் மற்றும் புலி ஆதரவாளர்களின் ஆதரவை யும் மறுபக்கம் புலிகளின் மிகக் கடுமையான எதிர்ப்பாளரான சோ போன்றவர்களின் ஆதரவையும் ஒரே நேரத்தில் பெறுகின்ற தந்திரமே இது. ஜெயலலிதா புலிகள் பற்றிப் பேசியிருப்பவற்றைக் கண்டு கொள்ளாமலே புலி ஆதரவாளர்கள் ஜெயலிதாவின் தீர் மானங்களை ஆதரித்துக் கூட்டங்கள், பேரணிகள் நடத்திக் கொண்டாடினார்கள்.

அதேசமயம், இலங்கையில் நடந்தது யுத்தம் அல்ல, பயங்கர வாதத்தை முறியடிப்பதில் ஏற்பட்ட பக்க விளைவுகள் தான் என்று சொல்லிக்கொண்டிருக்கும் சோ போன்றவர்களும் சட்டமன்றத் தீர்மானங்களை எதிர்த்து எதுவும் எழுதவில்லை. இந்தவகையில் ஜெயலலிதா வெற்றியடைந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

கச்சதீவை மீட்கவேண்டும் என்று சட்டமன்றத்தில் ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றுவது இதுதான் முதல் முறை அல்ல. 1991-ல் சுதந்திரதின உரையில் கச்சதீவை மீட்காமல் ஓயமாட்டேன் என்று முழங்கி, சட்டமன்றத்திலும் அதைத் தீர்மானமாய் நிறை வேற்றினார். தீர்மானம் நிறைவேற்றினாரே தவிர, வேறு செயல் களிற்கு அவர் செல்லவில்லை. பின்னர் 2001-2006 ஆட்சிக் காலத்திலும் கச்சதீவு பற்றி அவர் அலட்டிக்கொள்ளவில்லை.

இப்போது எல்லைதாண்டி மீன் பிடிக்க விரும்பும் தமிழக மீனவர்களின் ஆதரவைப் பெறுவதற்கும், பழைய அரசின் நல்ல திட்டங்களையும் போட்டுடைக்கும் குழப்பங்களிலிருந்து திசை திருப்பவும் தான் கச்சதீவுப் பேச்சு அவருக்கு உதவுகிறது.

தங்கள் எல்லைக்கு அப்பாலும் சென்று மீன் பிடிக்க ஆசைப்படு பவர்களுக்கு உகந்தவாறு பேசுவதைப் போலவே, யதார்த்த எல்லை யைக் கடந்த வெற்றுத் தமிழாவேசங்களுக்கு உகந்தவாறும் தன் நடவடிக்கைகளைக் காட்டிக் கொண்டிருக்கிறார் ஜெயலலிதா.

இன்னொரு நாடு சம்பந்தப்பட்ட தீர்மானங்களை எடுப்பது மத் திய அரசுதான் என்பதும், அது எந்தவகையான தேவைகளோடு அயல்நாடுகளில் காய்களை நகர்த்தி வருகிறது என்பதும், அது வை.கோ, சீமான் வகையறாக்களின் உணர்ச்சிகரங்களால் பாதிக்கப்படக்கூடிய ஒன்றல்ல என்பதும் ஜெயலலிதாவுக்குத் தெரியும். நமக்குத்தான் இன்னும் தெரியவில்லை. இல்லாவிட் டால், 'அடடா தனிநாட்டுக்குப் போகப் புதுச்சுருக்கவழி கிடைத்தி ருக்கிறது' என்று புளகாங்கிதப்பட்டு ஜெயலலிதாவுக்கு வாழ்த்துப் பாக்களை அனுப்பிவிட்டுப் பார்த்திருப்போமா நாம்?

- ஆசிரியர்.

# தொழில் வாய்ப்பைக் காட்டி பெண்கள் துஷ்பிரயோகம் மெல்லுகின்றவாய்க்கு அவலாகும் அபலைப் பெண்கள்

வடக்கு கிழக்கைச் சேர்ந்த 7 பெண்கள் உட்பட 9 பெண்கள், முகவர் ஒருவரினால் வேலைவாய்ப் புப் பெற்றுத் தருவதாக மோசடி செய்யப்பட்டு கொழும்பிற்குக் கூட்டிவரப்பட்டு ஏமாற்றப்பட்டார் களென யாழ் பத்திரிகைகள் செய்தி வெளியிட் டிருந்தன.

இவர்களுள் இருவர் 18 வயதிற்குக் குறைந்த வர்களெனவும் வவுனியா மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்தவர்களெனவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அபலைகள் எனவும் தெரிவிக்கப்பட் டிருந்தது.

இச் செய்தி, கொழும்பிற்கோ அல்லது வெளி நாடுகளுக்கோ சட்டப்படியாக வேலைவாய்ப் புகளைத் தேடிச்செல்லும் பெண்களின் நிலை மைகளை பொதுமைப்படுத்தும் இன்னொரு அபாய நிலைமையைத் தோற்றுவித்துள்ளதாக மகளிர் மற்றும் இளம் மகளிர் முன்னணி அமைப் பாளர் திருமதி அகலியா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபற்றி அவர் தெரிவிக்கையில், இந்தச் செய்தி பத்திரிகைகளில் பிரபலமாக்கப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு களைப் பெறுவதற்காக தொழில் முகவர்கள் ஊடாக முயற்சிகள் செய்து தோல்வியடைந்து தமது வீடுகளுக்குத் திரும்பிவந்த பெண்கள் சிலர் தமது ஊரவர்களினால் சொல்லொணா மன உளைச்சலுக்கு உள்ளாகி வருவதாகவும், இது மிகவும் கொடூரமானது எனவும் குறிப்பிட்டார்.

இவ்விடயம்பற்றி மேலும் கருத்துத் தெரிவித்த அவர், வன்னியிலிருந்த அப்பாவி மக்களின் அவ லங்களை தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் ஊட கங்களும் வெறும் அரசியல் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்துவதைத் தவிர்த்து அக்கறையுடன் அணுகி அவை உருவாவதற்கான ஊற்றுமூலங் களைக் கண்டுபிடித்து அவற்றை களைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டுமென தெரிவித்தார்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பிரபல பாட சாலைகளில் கல்விகற்கும் சில மாணவிகள் கருக் கலைப்புச் செய்துகொண்டதாக பொதுக் கூட்டங் களில் பகிரங்கமாகவே பேசப்பட்டவை பிரசுர மாவதை மிகவும் பொறுப்புணர்வுடன் தவிர்த்த ஊடகங்கள், இச் சம்பவத்தைமட்டும் பெட்டிச் செய்திகளாக்கி வெறும் பிரச்சாரத்திற்காகப் பயன் படுத்துவது தவறு எனக் குறிப்பிட்டார்.

இயக்கத்தில் சேர்ந்திருந்து தற்போது இலங்கை அரசினால் புனர்வாழ்வளிக்கப்பட்ட பல இளம் பெண்களை அவர்களது குடும்பங்களோ அல்லது தமிழ்ச் சமூகமோ அரவணைக்காத அவலநிலை தொடர்ந்து இருந்துவருகிறது. இவைபற்றி இப் பிரதிநிதிகள் கவலைப்பட்டதில்லை. இது தவிர பொருளாதார நீதியாக அவலநிலையிலுள்ள இந்தப் பெண்களின் அபாயகரமான நிலைமை யையிட்டு பல அறிக்கைகள் வெளிவந்தும், இந்த அரசியல்வாதிகளோ அல்லது ஊடகங்களோ இவர்கள்பற்றி பெரிதும் அலட்டிக் கொண்ட தில்லை. இந் நிலையில் இச் செய்தியை மட்டும் வெறும் பிரச்சாரத்திற்காகப் பிரசுரித்து சமூக மட்டத்தில் கீழ் நிலையிலுள்ள சகல பெண்களின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்குவது கண் டிக்கத் தக்கது என அவர் குறிப்பிட்டார்.

# தனியார் மருந்தகங்களின் சேவைகள்; பிராந்திய பணிப்பாளர் அறிவுறுத்தல்கள்

(யாழ்ப்பாணம்)

தனியார் மருந்தகங்களின் சேவைகளை ஒழுங்கு படுத்தும் முகமாக தனியார் மருந்தகங்கள் கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தி யகலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தனியார் மருந்தக உரிமையாளர்களுடனான சந்திப்பின் போது இந்த நடைமுறைகள் தொடர் பாக தீர்மானம் எடுக்கப்பட்டு அறிவுறுத்தப்பட் டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

அனைத்து மருந்தகங்களிலும் மருந்தாளர் ஒருவர் கடமையிலிருப்பதற்கான ஏற்பாடு செய்யப் படல் வேண்டும். அத்துடன் அனைத்து மருந்த கங்களும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக் கப்படவேண்டும். தற்போது யாழ். மாவட்டத்தில் மருந்தாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதனால், ஒரு தொகுதி மருந்தாளர்களுக்கு வெளிவாரி பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

இலங்கையின் ஔடதங்கள் மற்றும் வாசனைப் பொருட்களிற்கான சட்டங்களிற்கு அமைவாக அட்டவனை 1.11A என்பனவற்றில் அடங்கும். மருந்துகள் மட்டும் வைத்திய அதிகாரிகளின் மருந்துச்சீட்டு இன்றி விற்கப்படலாம். ஏனைய அனைத்து மருந்துகளும் வைத்திய அதிகாரிகளின் மருந்துச் சிட்டையுடன் மட்டுமே விற்பனை செய் யப்படலாம்.

சில மருந்துகள் சந்தையில் பல்வேறு தனியார் நிறுவனங்களாலும் பல்வேறு விலைகளில் சந்தைப்படுத்தப்படுகின்றன. எக்காரணம் கொண் டும் நோயாளிகளிற்கு விலை கூடிய மருந்துகளை திணிக்கக்கூடாது. நோயாளிகளிற்கு ஒரே மருந்து பல்வேறு விலைகளிலும் விற்கப்படுவதை தெரி விக்க வேண்டும். நோயாளியே தனது தெரிவிற் கேற்ப கூடிய அல்லது குறைந்த விலையிலுள்ள மருந்தைத் தெரிவு செய்யும் சுதந்திரம் வழங்க வேண்டும்.

வைத்திய அதிகாரிகள் குறிப்பிட்டு எழுதும் வகை மருந்தே நோயாளிக்கு வழங்கப்படல் வேண்டும்.

குளிரூட்டியில் வைத்து பேணப்படவேண்டிய மருந்துகள் உரிய முறையில் பேணப்படவேண்டும்.

பாவனைக் கால நிறைவுத்திகதி முடிவடைந்த மருந்துகள் தனியாக களஞ்சியப்படுத்தப்பட்டு உரியவரிடம் மீள ஒப்படைக்கப்படவேண்டும்.

தர நிர்ணயத்தில் தகுதியற்றவை என அறி விக்கப்பட்ட மருந்துகள் உடனடியாக விற்பனை செய்வது நிறுத்தப்படவேண்டும்.

இலங்கையில் பதிவு செய்யப்படாத எந்த மருந்துகளும் மருந்தகங்களில் விற்கப்படக்கூடாது.

மருந்தகங்களில் நோயாளர்களிற்கு சிகிச்சை வழங்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அரசுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் இழந்தவற்றை மீளப் பெற்றுக்கொள்ளமுடியும்

## மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா

(யாழ்.நிருபர்)

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலமே கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக நாம் இழந்தவற்றை மீளப்பெற்றுக்கொள்ள முடியும். எதிர்காலத்தில் எமது தமிழ்ச் சமூகம் நல்ல முறையில் வாழ்வதற்குத் தேவையான அரசியல் உரிமைகளையும் இணக்க அரசியல் மூலமாகவே வென்றெடுக்க முடியும் என்று யாழ். மாநகரசபை முதல்வர் யோ.பற்குணராசா குறிப் பிட்டார்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வரு டாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் சு.தியாகலிங்கம் தலை மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்து மத கலாசார விழுமியங்களைச் சிறப் பாகப் பின்பற்றிவரும் யாழ். இந்து ஆரம்ப பாட சாலை ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் ஆண்டுதோறும் புரட்சிகரமான சாதனைகளை நிலைநாட்டிவருகிற தென்றால், அதற்குக் காரணம் இங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களின் அர்ப்பணிப் பான சேவைதான்.

இங்கு கல்வி பயிலும் பிள்ளைகள் மிகவும் திறமைசாலிகள். அவர்களுடைய ஆற்றல்களை இந்த மைதானத்தில் காணமுடிந்தது என்று கூறிய அவர், யாழ். மாநகரசபையைப் பொறுத்த வரை யில் யாழ். நகர மக்களின் விருப்புக்கு மாறாக எந்த ஒரு திட்டத்தையும் முன்னெடுக்காது என்று குறிப்பிட்டார். வெற்றியீட்டிய மாணவர்களுக்கு மாநகர முதல்வரும், நல்லூர்க் கோட்டக் கல்விய திகாரி சி.மாணிக்கராஜாவும் பரிசில்களை வழங்கினர்.

(10)

# மக்கள் வங்கியின் பொன்விழா சிறப்பு மலர்

## 01.07.2011

## பொன் விழாப் பூரிப்பில் மக்கள் வங்கி...




அரைநூற்றாண்டு காலமாக இலங்கையின் வங்கியியல் வரலாற்றில் தனக்கென தனித்தடம் பதித்துக் கொண்ட மக்கள் வங்கியானது தனது பொன்விழாவினை கொண்டாடிக்கொண்டிருக்கும் இன்றைய நன்நாளிலே, மக்கள் வங்கியின் தோற்றம், வளர்ச்சிப் பாதைகள் மற்றும் சேவைச் சிறப்புக்கள் போன்றவற்றை எடுத்து நோக்குதல் மிகப் பொருத்தமானதாகும்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமராக இருந்த 1960 களில், பிரதான அரசாங்க வங்கிகளில் ஒன்றாக மக்கள் வங்கியினை ஸ்தாபிதம் செய்யும் பொருட்டு, ரி.வி.இலங்கரட்ண அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மசோதாவானது நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, 1961 ஆம் ஆண்டு 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் உருவாக்கப்பட்டு மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. மக்கள் வங்கியின் ஆரம்ப கால வளர்ச்சிக்கு வலுவூட்டி, அதனைக் கட்டியெழுப்புவதற்கு முன்நின்று உழைத்த மக்கள் வங்கித் தலைவர் திரு.வின்சன்ட் சுபசிங்க மற்றும் பொது முகாமையாளர் டபிள்யூ.எஸ். சொலமன் ஆகியோரது அளப்பெரிய சேவைகள் இத்தருணத்தில் நினைவு கூரப்பட வேண்டியனவாகும்.

முன்னதாக இலங்கையின் பொருளாதார நிதியியல் கட்டமைப்புக்குள் முக்கியத்துவம் பெற்றிருந்த கூட்டுறவு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்ததாக கிராமிய பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு மக்கள் வங்கியானது செயற்படத் தொடங்கியது.

**"மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி"** என்ற மகுட வாசகத்தினை ஏந்திய வண்ணம் நாடளாவிய ரீதியில் தனது சேவைகளை விரிவுபடுத்திக் கொண்ட மக்கள் வங்கியானது உலக மயமாக்கல், திறந்த சந்தைப் பொருளாதாரம மற்றும் சர்வதேச நிதியியல் முறைமைகள் மீதான துரித வளர்ச்சி கொண்ட காரணிகளின் அபிவிருத்தி போககுக் கேற்ப விரைவாக வளர்ச்சியடைந்து, பல்லாயிரக் கணக்கான வாடிக்கையாளர்களின் அடித்தளத்தைக் கொண்ட பிரதான அரச, வர்த்தக வங்கிகளில் ஒன்றாக பரிணமித்துக் கொண்டது. ஆங்கிலம் கற்றவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வங்கித் தொழில் முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு தமிழ், சிங்களம் ஆகிய தேசிய மொழிகளின் ஊடாக ஆட்சேர்ப்பு மேற் கொள்ளப்பட்டதுடன் சமுதாயத்தின் உயர்மட்ட வகுப்பினர் மாத்திரமின்றி விவசாயம், மீன்பிடி தொழிலாளர் பாரம்பரியத்திலிருந்தும் திறமையான ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யத் தொடங்கினர். பலதரப்பட்ட திறமைகளுடனும் அன்பு, கருணை, இரககம் போன்ற விழுமியங்களுடனும் ஊழியர்களால் வழங்கப்பட்ட சேவைகளின் பிரகாரம் நடுத்தர வர்க்கத்தினரும், கீழ் மட்ட வர்க்கத்தினரும் கூட, எமது வங்கியுடன் கைகோர்த்துக் கொண்டமையும் வரலாற்றின் நிகழ்வாகும்.

சேமிப்புகளைப் பெற்றுக்கொள்வதும், கடன்களை வழங்குதலும் என்ற அடிப்படையில் வங்கியியலுக்கு மேலதிகமாக மக்களோடு மக்களாக இணைந்து, பரந்துபட்ட ஒருங்கிணைக்கப்பட்ட சேவைச் சங்கிலியானது தொடர்ச்சியாகக் காணப்படுதல் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். நிதிச சேவைகளில் **"புதிது புனைதல"** என்னும் கருத்துக்கு மக்கள் வங்கி முன்னுதாரணமாக திகழ்கிறது. இலங்கை வங்கியியல் வரலாற்றில் முதன் முதலாக தங்க நகை அடகுக் சேவை அறிமுகப்படுத்திய பெருமை மக்கள் வங்கிக்கே உரித்தானது மட்டுமன்றி, இன்றி வரை தங்க அடகுச் சேவை தொடர்பிலான சந்தைத் தலைமைத்துவத்தினையும் மக்கள் வங்கி கொண்டுள்ளமை சிறப்பு அம்சமாகும்.

சித்திரைப் புத்தாண்டில் நிதிக்கொடுக்கல் வாங்கலுடன் ஆரம்பித்து, வங்கிப் பரிவர்த்தனையின்போது, கைவிசேடம் வழங்கும் பாரம்பரியமும் மக்கள் வங்கியிலேயே முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இத்தகைய பண்பாட்டுச் சிறப்பு வாய்ந்த திருநாட்களின்போது வாடிக்கையாளர்களுக்குப் பரிசுப்பொருட்களை வழங்கும் நடைமுறையும் இவ்வாறே மக்கள் வங்கியின் பெருமைக்குரிய அறிமுகங்களாகும். இன்றும்கூட, சகல சமுகத்தினரும் இத்தகைய விழாக்களின் போதும் மத அனுஷ்டானங்களுக்கு அடுத்தபடி வங்கிப் பரிவர்த்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்து விசேட கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு மகிழ்ச்சியும் மன நிறைவும் பெறுகின்றனர்.

இத்தகைய சமூகக் கட்டமைப்புடன் பின்னிப்பிணைந்த வங்கியியல் பாரம்பரியத்தை உருவாக்கிய மக்கள் வங்கியானது, பிறந்த குழந்தைகள் முதற்கொண்டு வயது முதிர்ந்த மூத்த பிரஜைகள் வரை சகல சமூகமட்டத்தினருக்குமான சிறப்பு வாய்ந்த சேமிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, மேலும் சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது. இச்சேவைகளின் தொடர்ச்சியாகவே பரிசுப்பொருட்கள் வழங்குதல், புலமைப்பரிசில் திட்டங்கள், அதிர்ஷ்ட குலுக்கல்கள், காப்புறுதி, கருத்தரங்குகள், வீட்டுத்திட்டங்கள் மற்றும் சமூக நலத்திட்டங்களை வழங்கி வருகின்றது. இலங்கையில் அரசியல் பொருளாதார வரலாற்றினை எடுத்து நோக்கின் அவ்வப்போது ஏற்பட்டு வந்த நெருக்கடி மிகுநத காலகட்டங்கள் யாவற்றிலும் தனிச் சிறப்பான வங்கிச் சேவையினை மக்கள் வங்கி வழங்கி வந்துள்ளது. 1983 இல் ஏற்பட்ட இனக்கலவரங்களின் போது இத்தகைய சேவைகள் மிகவும் சிறப்பாக வழங்கப்பட்டிருந்தன. கொள்ளைகளின் போது இழக்கப்பட்ட தங்க நகைகள் கூட மீளவும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலவிய கடும் போர்ச் சூழ்நிலைகளின்போது மக்கள் வங்கி மகத்தான சேவையினை வழங்கியது. அடிக்கடி ஏற்பட்ட இடப்பெயர்வுகளின்போது வங்கிக் கிளைகளும் இடம்பெயர நேர்ந்தபோதிலும் வங்கிச் சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன. 1995 இல் ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வின்போது மக்களோடு மக்களாக இடப்பெயர்வுக்கு மக்கள் வங்கி கடும்போர், பொருளாதாரத் தடை மற்றும் திரவப் பணத்துக்கு நிலவிய கடும் தட்டுப்பாடு போன்ற சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு தனது சேவைகளைத் திறம்பட வழங்கியது. மேலும் 1996 இல் மீண்டும் யாழ். பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த காலத்தில் வணிகர் பலர் தமது செயற்பாட்டு மூலதனம் அனைத்தையும் இழந்த நிலையில் மக்கள் வங்கி முன்னின்று எமது வணிகர்களுக்கு தற்காலிக மேலதிக பற்று மற்றும் குறுகிய கால கடன்கள் ஊடாக நிதிச் சேவையை வழங்கி யாழ். மாவட்டத்துக்கு அத்தியாவசிய உணவுப் பண்டங்களும் ஏனைய அவசிய நுகர்ச்சிப் பொருட்களும் கிடைக்க உதவி புரிந்து யாழ்.மக்கள் பஞ்சம், பட்டியினில் இருந்து விடுபட உதவியதை பல வணிக மக்கள் இன்றும் மறக்கமாட்டார்கள். இதேபோன்று 2009 இல் போரின் இறுதிக் கட்டத்திலும் இடம்பெயர்ந்த வங்கிகள் சிறந்த சேவைகளை வழங்கின. இதன்போது கூட தொலைந்த நகைகளுக்கான தற்போதைய சந்தைப் பெறுமதியினை வழங்கியும் வட்டிச் சலுகை வழங்கியும் உதவி வருவதைக் காணலாம்.

போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் திட்டங்களின் கீழ் நிதிசார் அபிவிருத்திக்கான முழுமையான பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. விவசாயம், மீனபிடி, கால்நடை வளர்ப்பு, சிறிய நடுத்தரக் கைத்தொழில்கள், சுயதொழில், வறுமை ஒழிப்பு போன்ற சகல துறைகளினூடாகவும் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கான நிதியியல் பங்களிப்பை தொடர்ச்சியாக வழங்கி வருவதனூடாக மக்கள் வங்கியானது தனது ஆரம்பகால கோட்பாடான கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் மீது தொடர்ச்சியான அக்கறையும், அனுசரணையும் வழங்கி வருகின்றது.

1980 களில் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த தாசாப்தங்களில் பிரபல்யம் பெற்றிருக்கும் நுண்பாக நிதியியல் நிதிசார் சேவையானது இன்று பரவலாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. கிராமங்கள் தோறும் கீழ்மட்ட வருவாய் பெறும் குடித்தொகைப் பரம்பலை இனங்கண்டு தொழில் முயற்சிகளுக்கான ஆலோசனைகளை அபிவிருத்தி செய்தல், தொழில்களுக்கான நிதிசார் முதலீட்டுக்கு அனுசரணை வழங்குதல், வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல், வருமானத்தைப் பெருக்குதல், சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்தல் படிப்படியான பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுப்பதனூடாக வறுமை ஒழிப்பு தொடர்பான ஆக்கபூர்வமான முன்னேற்றங்களை ஏற்படுத்தி கிராமிய பொருளாதார அபிவிருத்தியுடன் ஒன்றிணைந்த நாடளாவிய பொருளாதார முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் வகையில் மக்கள் வங்கியின் தொடர்ச்சியான பங்களிப்பு காத்திரமானதாகும். இது எவ்வாறிருப்பினும் மக்கள் வங்கியானது தனது பொருளாதார ரீதியான கடமைப் பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை மாறிவரும் சர்வதேச நிதிச்சந்தை நடவடிக்கைகள், அண்மைக்காலங்களில் ஏற்பட்ட உலகளாவிய ரீதியான நிதி நெருக்கடி அதிநவீன தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்களின்பாற்பட்ட நவீன வங்கியியல் நடவடிக்கையுடனும், ஒருங்கிணைந்த உயர்தரமான வங்கிச் சேவையினை முன்னெடுத்துச் செல்வதை அவதானிக்க முடியும்.

சிறிய நடுத்தர தொழிலாண்மைக்கான முக்கியத்துவம் இன்று நன்குணரப்பட்டுள்ளது. இத்துறைக்கான உயர்தரப் பங்களிப்பு மக்கள் வங்கியால் வழங்கப்பட்டு வருவதை இவற்றின் தொடர்ச்சியாகக் காணலாம். அரைநூற்றாண்டு சேவைதனை உறுதிபட வழங்கிய மக்கள் வங்கியானது தனது சேவைக்கான அங்கீகாரமாக மக்கள் மனதை வென்ற வங்கி என்னும் விருதினை **'SLIM Awards'** தொடர்ச்சியாக கடந்த 5 வருடங்களாக வென்றுள்ளதுடன் மட்டுமன்றி, **AA+** தரப்படுத்தலினையும் பெற்றுள்ளது. இங்ஙனம் இலங்கையில் வங்கியியல் துறையில் மிகப்பெரும் சக்தியாக வளர்ச்சி பெற்று அதிகூடிய கிளை வலையமைப்பையும், அதிகூடிய ஊழியர் வளத்தையும் வங்கியின் பெறுமதி மிக்க சொத்தாக 13 மில்லியன் வாடிக்கையாளர் தளத்தையும் ஒருங்கே பெற்றுள்ள வெற்றி மக்கள் வங்கியின் சாதனையாகும்.


அரச வங்கியாகவும் மக்கள் வங்கி என்ற ரீதியிலும் மக்கள் வங்கியின் பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கு நாட்டு மக்கள் அனைவருமே உரித்துடையவர்கள் ஆவர். எமது நாட்டின் தேசிய சொத்துக்களில் ஒன்றாகத் திகழும் மக்கள் வங்கியின் 50 ஆவது பிறந்தநாள் கோலாகலத்தை எமது வங்கியுடனும், ஊழியர்களுடனும் அனைத்து வாடிக்கையாளர்களுடனும், எமது நாட்டின் சகல சகோதர சகோதரிகளுடன் இணைந்து குதூகலத்துடன் கொண்டாடுவதுடன், எமது வங்கிக்கு எம் அன்பையும், பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளர், உதவிப் பிராந்திய முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள், சேவை நிலைய முகாமையாளர்கள் மற்றும் அனைத்து யாழ்.பிராந்திய மக்கள் வங்கி பணியாளர்கள், யாழ்ப்பாணம்.**

### புதிய வங்கிக் கிளைகளின் உதயம்...



### புலமைப்பரிசில் திட்டம்



### கடனடிப்படைத் திட்டம்



### வங்கியின் அபிவிருத்தியை நோக்கி...



### இன்று மக்கள் வங்கியில் 27 அதிர்ஷ்டசாலிகள் தெரிவாகின்றார்கள்




(C/791)

பிரமுகர்கள்,வாடிக்கையாளர்களின் வாழ்த்துச் செய்திகள் தொடர்ந்து வெளிவரும்

# குழந்தைகளிடம் எதிர்பார்க்கும் நற்பண்பை பெற்றோர் முதலில் செய்துகாட்ட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

குழந்தைகளிடம் எதிர்பார்க்கும் நல்ல பண்புகளைப் பெற்றோரே முதலில் கடைப் பிடிக்கவேண்டும். அப்போதுதான் குழந்தைகள் உளப்பூர்வமாக அதைப் பின்பற்றுவார்கள்.

தங்களால் மனதைக் கட்டுப்படுத்த முடியாத பெற்றோர் குழந்தைகளிடம் மனக் கட்டுப்பாட்டை எதிர்பார்க்க முடியாது என ஸ்ரீ சைதன்ய மிஷனைச் சேர்ந்த ஜாக்கிரத சைதன்ய சுவாமி கள் தெரிவித்தார்.

தேசிய சேமிப்பு வங்கிக் கிளையால் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவிற் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்விற்கு தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் ந.பகீரதன் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், பெற்றோரில் சிலர் தாங்கள் தொலைக்காட்சித் தொடர்களைப் பார்த்தபடியே பிள்ளைகளைத் தொலைக்காட்சி பார்க்கக்கூடாது என்று கூறுவார்கள். தம்மிடம் மனக்கட்டுப் பாடு இல்லாத பெற்றோர் அதைப் பிள்ளைகளிடம எவ்வாறு எதிர்பார்க்க முடியும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தேசிய சேமிப்பு வங்கியின் வடக்கு, கிழக்கு வலய முகாமையாளர் வி.அருளானந்தமும், சிறப்பு விருந்தினர்களாகத் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.கைலாசநாதன், உடுவிற் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர். மாணவர்க ளுக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப் பட்டன. (44)



அண்மையில் கல்முனை இருதயநாதர் மண்டபத்தில் நடைபெற்ற அகில இன நல்லுறவு ஒன்றிய சாஸ்ரீ தேசமானிய விருது வழங்கும் நிகழ்வில் கல்வி சமூக சேவைக்காக கு.பற்குணராசாவிற்கும், அரசியல் சமூக சேவைக்காக யாழ். மாநகரசபை உறுப்பினர் அ.கிளபோடாசியஸ்சிற்கும், கலாசார சமூக சேவைக்காக அதிபர் பா.வின்சனுக்கும் அரசியல் சமூக சேவைக்காக யாழ். மாநகரசபை உறுப்பினர் அ.மரியகொறட்டி ஆகியோருக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதைக் காணலாம். (வி)

# மானிடப் பண்புகளைப் பாதுகாப்பது ஊடகவியலாளர்களின் பொறுப்பாகும்

## - "கடிவாளம்" வெளியீட்டில் கலைப்பீடாதிபதி தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

சிறந்த மானிடப் பண்புமிக்க ஒரு சமுதாயத்தைக் கட்டி யெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு ஊடகவியலாளர்க ளுக்குண்டு. அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊட கங்களின் வாயிலாக உள் ளதை உள்ளவாறே சொல்லுகிற பண்பினை இளம் ஊட கவியலாளர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் முழுநேர நான்காம் அணி மாணவர்க ளின 'கடிவாளம்' பயிற்சி இதழ் வெளி யீட்டு விழாவில் பிரதம விருந் தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதி பதி பேராசிரியர் நா.ஞானக் குமரன்.

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் பாட இணைப்பாளர் தே. தேவானந் தலைமையில் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் கலைப் பட்டாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடின உழைப் பும், அர்ப்பணிப் புடனான செயற்பாடும் சிறந்த ஊடகவியலாளர்கள் உருவாக வழிவகுக்கும். சமூகத்திற்கு எந்த நேரத்தில் எவ்வாறான செய்தியை வழங்க வேணடும் என்ற அடிப் படையை ஊடகவியலாளர்கள் உணர்ந்து செயற்படவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஊடகத்துறையில் பட்டப் படிப்பினை வழங்குகிறது. இது ஏனைய பலகலைக்கழகங்க ளுக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்துள்ளது.

பத்திரிகையாளர்கள் பலரது அனுபவப் பகிர்வும், கடும் உழைப்பும் இந்த மாணவர்கள் 'கடிவாளம்' பத்திரிகையை வெளிக் கொண்டுவர உதவியது.

பிரதமவிருந்தினர் பேராசிரி யர் நா.ஞானக்குமரன் கடிவாளம் பத்திரிகையை வெளியிட்டு வைக்க, வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதற்பிரதி யைப் பெற்றுக்கொண்டார்.

பேராசிரியர் சத்தியசீலன், பேராசிரியர் சிவநாதன், உதயன் ஆசிரியர் பிறேமானந், யோசப் பாலா மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (10)

# மதுரையில் சர்வோதய மாநாடு

(யாழ்.நிருபர்)

அகில இந்திய சர்வோதய மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் தமிழ்நாடு மதுரையில் நடைபெறவுள்ளது. காந்தீயக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் சார்பாக 25 உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவர்களில் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டு வரும் மாநாட்டில் 'காந்திய சிந்த னைக் கற்கைநெறி' மாணவர்களும் அடங்குவர். (10)

## ஸ்ரீந்தரின் இன்றைய பலன்

(01.07.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
ஆனி 16 ஆம் நாள்.
இராகுகாலம் 10.26–11.56, சுபநேரம் 5.56 –7.26,
நட்சத்திரம் திருவாதிரை மு.இ 11.54 வரை
திதி: அமாவாசை பி.ப 2.53 வரை
அமாவாசை விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

- மேடம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, தனலாபம், காரியசித்தி, பண வரவு, தேக ஆரோக்கியம்.
- ரிஷபம்:– பண வரவு, குடும்பத்தில் அமைதி, உடல் நலக்குறைவு, தனச் சேர்க்கை, மனப் பயம்.
- மிதுனம் :– பணக் கஷ்டம், குடும்பத் தில் குழப்பம், மனச் சஞ்சலம், உறவினர் வருகை, தொழில் நஷ்டம்
- கடகம்:– குடும்பத்தில் குதூகலம், பண வரவு, தேக ஆரோக்கியம், நண்பர் தொல்லை, வீண் கற்பனை.
- சிம்மம்:– உறவினர் விரோதம், பொருள் இழப்பு, தொழில் விருத்தி, பணக் கஷ்டம், மனக் கவலை.
- கன்னி :– பண வரவு, உடல் ஆரோக்கியம், உறவினர்கள் விரோதம், குடும்பத்தில் குழப்பம்.
- துலாம் :– பண வரவு, உடல் ஆரோக்கியம், உறவினர்கள் விரோதம், குடும்பத்தில் குழப்பம்.
- விருச்சிகம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, அரச பயம், உடல் நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு.
- தனுசு:– பணக் கஷ்டம், தொழில் நஷ்டம், ஆலய வழிபாடு, பொருள் இழப்பு, தியாகம்.
- மகரம்:– குடும்பத்தில் குதூகலம், மன மகிழ்ச்சி, தனலாபம், பணம் வரவு, ஆதாயம்.
- கும்பம் :– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, வீண் கற்பனை, உறவினர் விரோதம், தெய்வசிந்தனை.
- மீனம்:– பண வரவு, தேக ஆரோக்கியம், வீண் வாக்குவாதம், நண்பர் வருகை, திருடர் பயம்.

# யாழ்ப்பாண மரக்கறி தென்பகுதிக்கு ஏற்றுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் அதிகளவில் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப படுகின்றன. கத்தரி, தக்காளி, புடோல், பயிற்றை, வெங் காயம் போன்ற மரக்கறி வகைகளே அதிகளவில் வாகனம் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. தற்போது யாழ்ப்பாணத்தில் மரக்கறி வகைகளின் விலைகளில் வீழ்ச்சியடைந்தும் காணப்படுகின்றன. அதனைவிட மரக் கறி உற்பத்தியும் அதிகரித்திருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். (வி)

# மீள் குடியேறியுள்ள இடங்களில் மக்களின் துப்புரவுப் பணிகள்

(விசுவமடு)

மீள்குடியேற்றம் இடம்பெற்றுள்ள சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இடப்பெயர்வின்போது பல்வேறு பகுதி மக்களும் இப்பகுதிகளுக்குச் சென்று தமது இருப்பிடங்களை அமைத்துத் தங்கி இருந்தனர். ஒரு காணியில் பல வீடுகள் தற்காலிகமாக அமைக்கப்பட்டு இருந்தது.

மக்கள் அனைவரும் நலன்புரி முகாம்களுக்குச் சென்று மீண்டும் அங்கிருந்து தமது சொந்தக் கிராமங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம் பகுதிகளில் கடந்த வாரம் மக்கள் மீளக்குடியேற்றப்பட்டிருந்தனர்.

காணிகளில் காணப்படும் இரும்புப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்ட இடங்களிலுள்ள மரந்தடிகள் என்பவற்றை அகற்றி, காணிகளைத் துப்புரவு செய்யும் பணியில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

உந்த மினிபஸ்காரரற்ற விளையாட்டுப் பெரிய விளையாட்டு! நிண்டான் பாய்ஞ்சான் எண்டமாதிரித்தான் பொலிசுக்காரரைக் கண்டால் போதும் தங்கள்ல எந்தப் பிழையும் இல்லப் பிரயாணியள் தான் எல்லாப் பிழையளையளும் செய்யிற எண்ட மாதிரிப் பிரயாணியளில ஏறி விழுவினம்.

புட்போட்டில நில்லாதேங்கோ, உள்ளுக்க போங்கோ போங்கோ! எண்டு கத்துவாங்கள், எங்க உள்ளுக்கை போறது... ஆரும் பகிடிக்காரர் நிண்டினமெண்டா பின்னால திறந்து விடுங்கோ அதால போகலாமெண்டு.

சாதுரியமா தூரம் போறதோ கிட்டப் போறதோ எண்டு கேட்டறிஞ்சிடுவினம். கிட்டப் போறண்டா வெளியில இறங்கி நிக்கச் சொல்லுவினம். கடைசியா ஏத்தாலாமெண்டு! கடைசியில நெரிபட்டுச் சாகிற கிட்டப்போற சனங்கள்தான்.

நல்லா முட்டச் சனத்தை ஏத்தினாலும் வேற வழியில்ல நிக்கிற சனத்தயும் விடாயினம். பஸ் நிலையத்தில நிண்டு வெளிக்கிட்டால் நாரிப்பிடிப்பு வந்த பொம்பிளையள் மாதிரி மெதுமெதுவா ஊந்து கொண்டுதான் பஸ்போகும். ஏனெண்டா வழிவழிய நிக்கிறதுகளை யும் ஏத்துறதுக்குத்தான்.


இந்த நேரம் யாழ். ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, முட்டாய்க்கடைச் சந்தி தாண்டினாத்தான் பஸ் வேகம் கொள்ளும். அவ்வளவு இடமும் இவை ஊந்து போக பின்னால வாறவையும் ஊரவேண்டித்தான் வரும்.

அந்த நேரங்களில சைக்கிள்ல நான் பின்னால வந்தனெண்டா எனக்குப் பத்திக்கொண்டுதான் வாறது. பின்னை என்ன, இவேன்ர சுயநலத்துக்குப் பலியாகிறது நாங்களே? அவையளின்ர அலுவல் சுலபமா முடியவேணும் மற்றவை எப்பிடிப் போனாலும் சரிதான். இதனாலதானே இண்டைக்கு நாங்களிந்தக் கேவலமாப் போட்டம்.

பொலிசுக்காரர் இல்லையெண்டா நிறுத்தக்கூடாது. பூபாலசிங்கம் கடை மூலை, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதிச் சந்தியளில நிண்டு ஆக்களை ஏத்துறது.


இந்தச் சனங்களும் அப்பிடியான இடங்களில நிண்டுதான் பஸ்சுகள மறிக்குங்கள். முழத்துக்கு முழம், கண்ட கண்ட இடங்களெல்லாம் பஸ்கோல்ட்தான். பின்னால சைக்கிள்ள வேறும் வாகனங்களில வாறவங்களும் சடுதியா பிறேக் போட்டு நிண்டிட வேணும்.

உப்பிடி மினிபஸ் காறங்களைப் பாத்துச் சீரீப்பிக்காறரும் பழகிட்டாங்கள். இந் நிலைல யாழ்.நகரப் பகுதிகளில பிரயாணம் செய்யிற தெண்டா முதல்ல சர்க்கஸ் பழகியிட்டுத் தான் போக வரவேணும பாருங்கோ!



பரமர் சங்கமம்

# 13 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்டத் தொடர் ஹென்றியரசர், சாவகச்சேரி இந்து சம்பியன்


இளவாலை ஹென்றியரசர்


சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலை அணிகளின் 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான கால் பந்தாட்டப் போட்டித் தொடரில் இள வாலை ஹென்றியரசர் மற்றும் சாவகச் சேரி இந்துக் கல்லூரி அணிகள் சம்பி யனானது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேள னத்தின் ஒழுங்கமைப்புடன் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் இப்போட்டி நடாத்தப்பட்டது.

ஆண், பெண்கள் என இரு பிரிவு களில் இடம்பெற்ற இப்போட்டி யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் அணியும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி யும் மோதின. ஆரம்பம் முதலே ஹென் றியரசர் கல்லூரி அணி ஆட்டத்தை தம் வசம் வைத்திருந்தது. இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது.

பெண்களுக்கான இறுதிப் போட்டி யில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, குளமன்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் மோதின. இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டி யில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி ஒரு கோலைப் போட்டு முன் னிலை பெற்றது. இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பி யனாகியது.

சம்பியனான அணிகளுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது. இதேவேளை தேசிய ரீதியான போட்டி இம்மாதம் நடுப்பகுதியில் நடை பெறுமென இலங்கை கால்பந்தாட்ட சம மேளன அதிகாரிகள் தெரிவித்தனர். (20)

## சாதனையுடன் கூடிய வெற்றி; பற்றீசியன்ஸ் அணி பெற்றது

(யாழ்ப்பாணம்)

ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண் ணத்திற்கான ஐம்பது ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் மூன்றாவது காலிறு திப் போட்டியில் பற்றீசியன்ஸ் அணி 217 ஓட்டங்களால் அபாரமான வெற்றி பெற்றது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் ஒன்பதாவது ஆண்டாக நடாத்தும் இத் தொடரின் மூன்றாவது காலிறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

இதில் பற்றீசியன்ஸ் அணியும், சிறி காமாட்சி அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பற் றீசியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத் தாடியது. இதில் பற்றீசியன்ஸ் அணி 47 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 350 ஓட்டங்களைப் பெற்றது. இவ்வோட்ட எண்ணிக்கை யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையிலான போட்டி யில் ஒரு சாதனையாகக் கொள்ளப்படு கின்றது. இதில் பி. பத்மமுரளி 65 (தொட ரின் 65ஆவது அரைச்சதம்), கிளின்ரன் 78(தொடரின் 66 அரைச் சதம்), நிதர்சன் 77 (தொடரின் 67ஆவது அரைச் சதம்) ஓட்டங்களையும், சுகிர்தன் ஆட்டமிழக் காது 32 ஓட்டங்களையும் பெற்றனர். நிதர்சன், சுகிர்தன் பத்தாவது விக்கெட் இணைப்பாட்டமாக 106 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை ஒன்றையும் நிலை நாட்டினர். 2006ஆம் ஆண்டு நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி சார்பாக எம். துஜீவன், நிதர்சன் ஆகியோரது இணைப்பாட்டமாக 64 ஓட்டங்களே இதற்கு முன்னர் சாதனையாக இருந்தது. பந்து வீச்சில் நிரூஜன் ஐந்து, சுஜன் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த் தினர்.

பதிலுக்கு ஆடிய சிறிகாமாட்சி அணி 26.2 ஓவர்கள் நிறைவில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங் களைப் பெற்றுத் தோல்வியைத் தழு வியது. இதில் நிரோசன் 51, நிரூசன் 24, சாருஜன் 24 ஓட்டங்களைப் பெற்ற னர். பந்து வீச்சில் பத்மமுரளி, சஜீன்ரன், நோபேட், அலஸ்ரின் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இவ்வெற்றியின் மூலம் பற்றீசியன்ஸ் அணி, அரையிறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்கொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (42)

## கிண்ணம் வென்ற அணிகள்

(நெல்லியடி)

மாலுச் சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட ருவெண்ரி 20 மற்றும் 10 ஓவர்கள் போட், ஐந்து ஓவர்கள் கொண்ட போட்டியும் நடாத் தப்பட்டது.

இதற்கான இறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மைக்கல் விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற் றது.

இதில் ருவெண்ரி 20 போட்டியில் வல் வெட்டித்துறை கழுகு அணியும் கர வெட்டி மகேசன் அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய கழுகு அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங் களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய மகே சன் அணி 15ஆவது ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதனால் கழுகு அணி சம்பி யனாகியது.

அடுத்து நடைபெற்ற பத்து ஓவர்கள் கொண்ட இறுதிப் போட்டியில் குரும் பகட் உதயசூரியன் அணியை எதிர்த்து வதிரி ஸ்ரீமுருகன் அணி மோதியது. முதலில் ஆடிய உதயசூரியன் அணி 10 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக் களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. இதிலுக்கு ஆடிய ஸ்ரீமுருகன் அணி 9ஆவது ஓவரில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்ததுடன் சம்பியனாகவும் தெரிவானது.

இறுதியாக நடைபெற்ற ஐந்து ஓவர் கள் கொண்ட போட்டியில் கரவெட்டி ஐங்கரா அணியும், உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் அணியும் மோதின.

முதலில் ஆடிய ஐங்கரா அணி 5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட் டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய நவஜீவன்ஸ் அணி நான்காவது ஓவரில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங் களைப் பெற்றுத் தோல்வியைத் தழு வியது. இதனால் ஐங்கரா அணி சம்பியனாகத் தெரிவானது.

இப்போட்டி நிகழ்விற்கு பிரதம விருந் தினராக பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம். வேதாபரணமும், சிறப்பு விருந்தினராக அல்வாய் சின் னத்தம்பி வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர் எஸ். செல்வராஜாவும் கலந்து கொண்டனர். (12)

## நீண்ட இடைவெளிக்குப்பின் வருடாந்த விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல் லூரியின் ஜின்னா மைதா னத்தில் நாளை அல்-ஹதிஜா பாலர் பாட சாலையின் வருடாந்த விளையாட்டு விழா இடம்பெறவுள்ளது.

சிறுவர்களின் பல விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன் பெற்றோர்களுக்கான போட்டிகளும் இடம்பெறுமென போட்டி ஏற்பாட் டாளர்கள் தெரிவித்தனர்.

மிக நீண்ட காலத்திற்கு பின்னர் பெற்றோர்கள் இணைந்து நடாத்தும் இப்பாலர் பாடசாலையின் விளை யாட்டு விழாவில் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாகவும், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற் குணராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ரிக்கெட் விற்பனை தொடர்பாக விசாரணை நடத்த ஐ.சி.சி. முடிவு

கடந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின்போது, ஆயிரக்கணக்கான ரிக் கெற்றுகள் எவ்வாறு கறுப்புச் சந்தைக்கு அல்லது வி.ஐ.பி.கள், பொலிஸார் மற் றும் அரசியல்வாதிகளின் கைகளுக்குச் சென்றன என்பது குறித்து விசாரணை நடத்தப்படும் என சர்வதேச கிரிக்கெட் சபை உறுதியளித்துள்ளது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ரிக்கெற்றுகள் கையாளப்பட்ட விதம் குறித்து விமர்சிக்கும் அறிக்கையொன்று ஹொங்கொங்கில் நடைபெறும் ஐ.சி.சி. நிறைவேற்றுக்குழு மாநாட்டுக்கு கிடைத்துள்ளது. அதைடுயடுத்து, ஐ.சி.சி. இந்த உறுதியை வழங்கியுள்ளது.

ரிக்கெற் விற்பனை மற்றும் அரங்கு களின் நிர்மாணங்கள் தொடர்பான சில குறை பாடுகளை இந்த அறிக்கை சுட்டிக் காட்டு கிறது. என ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

இதேவேளை உலகக்கிண்ணப் போட்டிகளின்போது குறிப்பாக இறுதிக் கட்டங்களில் ரிக்கெற் விநியோகத்தில் ஊழல்கள் இடம்பெற்றதாக வெளியான அறிக்கைகள் குறித்து தாம் அசௌ கரியத்துக்குள்ளானதாக ஐ.சி.சி. சிரேஷ்ட அதிகாரிகள் சிலர் தனிப்பட்ட ரீதியில் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இவ்விவகாரம் ஐ.சி.சி. பிரதம நிறை வேற்று அதிகாரி ஹாருன் லோகார்ட்டை மிகவும் சங்கடத்திற்குள்ளாக்குவதாகும். பாகிஸ்தான் வீரர்கள் மூவர் ஸ்பொட் பிக்ஸிங் குற்றச்சாட்டுக்கு உள்ளான நிலையில், ஊழல் அற்ற உலகக்கிண்ணப் போட்டிகளை நடத்துவதாக லோகார்ட் வாக்குறுதியளித்திருந்தார்.

ஆனால், வீரர்களுக்குப் பதிலாக அதி காரிகள் மீது கவனம் திரும்பியிருக்கும் நிலையே இப்போது ஏற்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

(கரணவாய்)

இமையாணன் இளைஞர் விளை யாட்டுக்கழகத்தின் அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கழக மைதானத் தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் மற்றும் சிறப்பு விருந்தி னராக கிராம சேவையாளர் ரி. யுவனேந் திரன் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். இக்கூட்டத்திற்கு சகல கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் அனை வரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கழகத்தினர் அறிவித்துள்ளனர். (18)

## அரையிறுதியில் நடால் - முர்ரே

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் கிராண்ட் ஸ்லாம் அரையிறுதிக்கு ஸ்பெயின் வீரர் நடால், செர்பிய வீரர் ஜோகோ விச், பிரிட்டன் வீரர் ஆண்டி முர்ரே ஆகியோர் தகுதி பெற்றனர். முன்ன தாக ரோஜர் பெடரர் அதிர்ச்சித் தோல்வி தழுவி வெளியேறினார்.

10ஆம் தரநிலையில் உள்ள அமெ ரிக்க வீரர் மார்டி பிஷை எதிர்கொண்ட நடால் 6- 3, 6- 3, 5- 7, 6- 4 என்ற செட்களில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

2ஆம் தரநிலையில் உள்ள நோவக் ஜோகோவிச், அவுஸ்ரேலிய வீரர் பெர்னர்ட் டோமிக் என்பவரை 6- 2, 3- 6, 6- 3, 7- 5 என்ற செட்களில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறி னார்.

4ஆம் தரநிலை பிரிட்டன் வீரர் ஆண்டி முர்ரே, தரநிலையில் இல்லாத ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ லோபஸை 6- 3, 6- 4, 6- 4 என்ற நேர் செட்களில் வீழ்த்தினார்.

அரையிறுதியில் நடால்-முர்ரே, சோங்கா-ஜோகோவிச் மோதுகின்றனர்

## புதிய முடிவெடுத்தார் அலெக்சிஸ் சான்செஸ்

(ரோம்)

புகழ்பெற்ற இத்தாலியின் உடினேச கிளப்பின் அதிரடி கால்பந்து வீரரான அலெக்சிஸ் சான்செஸ் தனது அடுத்த முடிவை எடுத்துள்ளார்.

தற்போதுள்ள கிளப்பில் இருந்து வெளியேற விரும்பினால் பார்சிலோனாவின் நோகேம்ப் ஸ்டேடியத்திலேயே ஆட விரும்புகிறேன் எனக் கூறியுள்ளார். பார்சிலோனா அணியில் ஆடாத பட்சத்தில் எனது ஆட்டம் உடினேச கிளப்பிலேயே தொடரும் என கூறியுள்ளார்.

உடினேச கால்பந்து 1896ஆம் ஆண்டு இத்தாலியில் தொடங்கப்பட்ட கால்பந்து கிளப் ஆகும். 22 வயது சிலி வீரர் சான்செசை தங்கள் அணியில் கொண்டு வர வேண்டும் என மான்செஸ்டர் சிட்டி அணியும், செலிசா கிளப்பும் தீவிரம் கொண்டுள்ளன.

மேற்கு லண்டனில் உள்ள இங்கிலீஸ் கிளப்பான செலிசா அலெக்சிஸ் சான்செசை சேர்க்கப் பணத்தைக் கொட்டவும் தயாராகி இருக்கிறது. இருப்பினும், அந்தக் கிளப்புகளின் முயற்சி உரிய பலன் தராது என்றே தெரிகிறது.

2006ஆம் ஆண்டு சிலி நாட்டின் சோப்ரலோ அணியில் இருந்து விலகிய பின்னர் இத்தாலி கிளப்பில் சான்செஸ் சேர்ந்தார். அவர் 2014ஆம் ஆண்டு வரை அந்த கிளப்பில் இருக்க ஒப்பந்தம் செய்துள்ளார்.

இவரின் முடிவு எந்தளவிற்கு வெற்றியளிக்கும் என்பது குறித்து இப்போது கருத்துக் கூற முடியாதென கால்பந்து விமசர்கள் தெரிவித்துள்ளனர்.

## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து சோகத்துடன் விடைபெற்ற சனத்

(லண்டன்)

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியோடு இலங்கையின் அதிரடி தொடக்க ஆட்டக்காரரான சனத் ஜெயசூர்யா கிரிக்கட்டில் இருந்து சோகத்துடன் விடைபெற்றார்.

தனது கடைசி போட்டியில் அவர் 2 ரன்கள் மட்டுமே எடுத்தார். 1989ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமானார் ஜெயசூர்யா. அதன் பிறகு இலங்கையின் அதிரடி தொடக்க ஆட்டக்காரராக உருவெடுத்தார்.

1996இல் இலங்கை உலகக் கோப்பையை வெல்வதற்கு முக்கிய பங்காற்றினார். மோசமான ஆட்டத்திறன் காரணமாக சமீபத்தில் நடைபெற்ற உலகக் கோப்பையில் அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. பின்னர் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டிக்கு அழைக்கப்பட்டார். ஆனால் முதல் போட்டியோடு அவர் ஓய்வு பெற்றுவிட்டார்.

110 டெஸ்ட், 445 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். ஒருநாள் போட்டியில் 13,430 ரன்களையும், 323 விக்கெட்டுகளையும் எடுத்துள்ளார். இப்போது அவர் இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

## சுழற்சி முறையில் தலைவர் தேர்வு; அடுத்த கூட்டத்திலேயே இறுதி முடிவு

(ஹொங்கொங்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் பதவிக்கான தேர்வு முறை மாற்றம் குறித்து அடுத்து வரும் செயற்குழுக் கூட்டத்திலேயே முடிவு செய்யப்படும் என சர்வதேச கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

பணம் கொழிக்கும் கிரிக்கெட்டை நிர்வகிக்கும் சர்வதேச கிரிக்கெட் சபை தலைவர் பதவிக்கு யாரைத் தேர்வு செய்வது என்பது சுழற்சி முறையில் முடிவு செய்யப்படுவது வழக்கம். அந்த முறைப்படி பார்த்தால் அடுத்த தலைவர் பொறுப்புக்கு பாகிஸ்தான் அல்லது பங்களாதேஷ் கிரிக்கெட் சங்க நிர்வாகிகளுக்கு வழங்க வேண்டும். இந்த நிலையில் சுழற்சி முறையில் ஐ.சி.சி. தலைவர் தேர்வு செய்யும் முறையை மாற்றும் திட்டம் குறித்து ஹொங்கொங்கில் நடந்து வரும் ஐ.சி.சி. யின் ஆண்டு பொதுக்குழுவில் விவாதித்து முடிவு செய்ய திட்டமிடப்பட்டு இருந்தது. இந்த நிலையில் தலைவர் தேர்வு முறை மாற்றம் விவகாரம் குறித்து அக்டோபர் மாதம் நடைபெறும் செயற்குழுவில் முடிவு செய்வது என்று தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

## ஹார்பர் நீக்கம்

இந்தியா - மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கு நடுவராக அறிவிக்கப்பட்டிருந்த அவுஸ்திரேலிய நடுவர் டரல் ஹார்பர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இந்தியா - மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய வீரர்கள் மூன்று பேருக்கு தவறான அவுட் கொடுத்தார். இதனால் அவருக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்து அவரை அதிரடியாக நீக்கியுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளார்.

## என்னுடைய அணுகுமுறை எதுவோ அது சச்சினுடன் ஒத்துப்போகிறது!

இந்திய கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கரின் அணுகுமுறையும் என்னுடைய அணுகுமுறையும் சில விதங்களில் ஒத்துப்போவதாக உலகின் அதிவேக மனிதனும் 100,200 மீற்றர் ஓட்ட உலக சம்பியனுமான ஜமைக்காவின் உசைன் போல்ட் தெரிவித்துள்ளார். அவர் கடமையுணர்வு மிக்கவர், ஆக்ரோஷமானவர், ரன்கள் எப்படிச் சேர்ப்பது என்பதை நன்கு அறிந்தவர், கட்டுப்பாடுடைய முறையில் அவர் தனது ஆக்ரோஷத்தை துடுப்பாட்டத்தில் வெளிப்படுத்தி வருகிறார்.

அவர் ரசிகர்களுக்காகவும் விளையாடுகிறார். அதாவது நான் என்ன செய்கிறேனோ எனது அணுகுமுறை எதுவோ அதுவும் சச்சினுடன் ஒத்துப் போவதாக அமைந்துள்ளது.

சச்சின் டெண்டுல்கர் விளையாடுவதை நேரில் பார்க்க விரும்புகிறேன், அவரை நேரில் சந்திக்க இன்னும் சில காலம் பிடிக்கலாம், ஆனால் என் ஓட்டத்தைப் பார்க்க சச்சினை அழைக்கிறேன் என்றார் உசைன் போல்ட். டெண்டுல்கர், லாரா, ரிச்சர்ட்ஸ், சோபர்ஸ், ஷேன் வோர்ன் ஆகிய வீரர்களில் யார் போல்ட்டிற்குப் பிடித்த சிறந்த வீரர் என்ற கேள்விக்கு பதில் அவ்வளவு எளிதல்ல என்று கூறிய போல்ட், அனைத்து வீரர்களும் அவரவர் காலகட்டங்களில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளனர். ஆனாலும் நான் விவியன் ரிச்சர்ட்ஸையே கூறுவேன் என்றார் உசைன் போல்ட்.

## அமெரிக்கா அபார வெற்றி

(பேர்லின்)

பெண்கள் உலகக் கோப்பை கால்பந்து தொடரின் லீக் போட்டியில், அமெரிக்க அணி 2-0 என்ற கோல் கணக்கில் வட கொரியாவை வீழ்த்தியது.

ஜேர்மனியில் பெண்களுக்கான 6ஆவது உலகக் கோப்பை கால்பந்து தொடர் நடக்கிறது. இதில் பிரேசில், ஜேர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட உலகின் 16 முன்னணி அணிகள் பங்கேற்கின்றன.

'சி' பிரிவில் நடந்த லீக் போட்டியில் அமெரிக்கா - வட கொரியா அணிகள் மோதின. விறுவிறுப்பான இப்போட்டியின் முதல் பாதி முடிவில் இரு அணி வீராங்கனைகளால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.

பின், இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட அமெரிக்க அணிக்கு லவுரன் செனி (54ஆவது நிமிடம்), ராசல் புக்லர் (76ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். இதற்கு வட கொரிய வீராங்கனைகளால் பதிலடி கொடுக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் அமெரிக்கா 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

'சி' பிரிவில் நடந்த மற்றொரு லீக் போட்டியில் சுவீடன், கொலம்பியா அணிகள் மோதின. இதில் ஜெசிகா லாண்ட்ஸ்டிரோம் (57ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து கைகொடுக்க, சுவீடன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.




## அரையிறுதியில் சானியா ஜோடி

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதியில் விளையாட இந்தியாவின் சானியா மிர்சா ரூ எலினா வெஸ்னினா (ரஷ்யா) ஜோடி தகுதி பெற்றது.


காலிறுதியில் ஸ்பெயினின் லகோஸ்டரா விவஸ் ரூ பாரா சான்டாஞ்ஜா ஜோடியுடன் சானியா ஜோடி நேற்று முன்தினம் மோதியது. முதல் செட்டில் அபாரமாக விளையாடிய விவஸ் ரூ பாரா ஜோடி 6 - 3 என்ற கணக்கில் வென்று முன்னிலை பெற்றது.

இரண்டாவது சுற்றில் கடும் நெருக்கடி கொடுத்த சானியா ஜோடி 6-4 என்ற கணக்கில் வென்று சமநிலை ஏற்படுத்தியது.

இதையடுத்து, வெற்றி யாருக்கு என்பதை தீர்மானிக்கும் கடைசி செட் ஆட்டத்தில் அனல் பறந்தது. இரு ஜோடிகளுமே தங்களின் சர்வீசில் புள்ளிகளைக் குவித்ததால் ஆட்டம் இழுபறியாக நீடித்தது.

கடும் போராட்டத்துக்கு பின் சானியா ஜோடி 3 - 6, 6 - 4, 7 - 5 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இறுதி வரை போராடி இறுதிப் போட்டிக்கு நுழைவதே எமது முதல் இலக்கு என வெற்றியின் பின்னர் சானியா ஜோடி ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தனர்.




## சோதனையில் தோல்வி

(புதுடில்லி)

இந்திய முன்னணி தடகள வீராங்கனைகள் மந்தீப் கவுர், ஜுவானா முர்மு ஆகியோர் ஊக்க மருந்து சோதனையில் சிக்கி உள்ளனர். அவர்கள் தடை செய்யப்பட்ட அனாபோலிக் என்ற ஊக்கமருந்தை பயன்படுத்தியது சர்வதேச தடகள சம்மேளனம் சார்பில் நடத்தப்பட்ட சோதனையில் தெரியவந்தது. இந்த நிலையில் 2ஆவது கட்ட 'பி' மாதிரி சோதனையிலும் அவர்கள் ஊக்கமருந்து உட்கொண்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து உடனடியாக இருவரையும் இந்திய தடகள சம்மேளனம் நீக்கம் செய்துள்ளது. அடுத்ததாக, ஊக்கமருந்து தடுப்புக் கழகம் அவர்களிடம் விசாரணை நடத்தும். இதன் முடிவில் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படும். இருவரும் இரண்டு ஆண்டு காலம் வரை தடையை எதிர்நோக்கி உள்ளனர். இதில் மந்தீப் கவுர் கொமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டில் 4x400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற இந்தியக் குழுவில் இடம் பெற்றார். ஒரிசாவைச் சேர்ந்த ஜுவானா ஆசிய விளையாட்டில் 400 மீற்றர் தடை ஓட்டத்தில் 4ஆவது இடத்தைப் பிடித்தார்.

எதிர்வரும் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இராணுவ உறவைப் பலப்படுத்த இலங்கை - இந்திய அதிகாரிகள் சந்திப்பு

(கொழும்பு)

**இந்திய- இலங்கை இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான மூன்று நாள் கலந்துரையாடல் புதுடில்லியில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.**

இருநாட்டு இராணுவங்களுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கான திட்டத்தின் ஒரு கட்டமாகவே இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது.

இலங்கை இராணுவத் தளபதியின் செயலர் மேஜர் ஜெனரல் எச்.சி.பி குணதிலக தலைமையிலான ஐந்து உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட குழு இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்க புதுடில்லி சென்றுள்ளது.

இந்தியத்தரப்புக் குழுவுக்கு இந்திய இராணுவத்தின் அனைத்துலக ஒத்துழைப்புக்கான மேலதிக பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஐ.பி.சிங் தலைமை தாங்குகிறார்.

நேற்று ஆரம்பமான இந்தக் கலந்துரையாடல் இன்று வரை இடம்பெறுகின்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது போர் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது, கிளர்ச்சி முறியடிப்புத் தொடர்பாக கோட்பாடுகள் குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் மிகநெருக்கமான உறவுகள் இருந்து வரும் நிலையில், இந்தக் கலந்துரையாடல் முக்கியமானதொரு மைல்கல்லாக அமையும் என்று இந்திய இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்ற செயற்பாடுகளின் விளைவாக இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் சாத்தியங்கள் உள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தக் கலந்துரையாடலுக்காக புதுடில்லி சென்றுள்ள இலங்கை இராணுவ அதிகாரிகள் குழு இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் பலரையும் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் நாளை சனிக்கிழமை இவர்கள் கொழும்பு திரும்பவுள்ளதாகவும் புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சரணாலயத்தில் தீவிபத்து

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் கலகொட சரணாலயத்தில் ஏற்பட்ட தீ விபத்தில்15 ஏக்கர் நிலப்பரப்பு அழிவடைந்துள்ளதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பொலிஸார்,அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர்,வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் பிரதேச வாசிகசின் ஒத்துழைப்புடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.


## வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இரத்மலானை பயிற்சி நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

இரத்மலானை பயிற்சி நிலையத்தில் 30 பெண்கள் உணவு நஞ்சானதன் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்தே தற்காலிகமாக இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

## இலங்கையில் சர்வதேச நடவடிக்கைகளில் சீனாவின் யுவான் நாணயம் பயன்பாடு



(கொழும்பு)

சீனாவின் யுவான் நாணயத்தை இலங்கை ஊடாக சர்வதேச நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த இலங்கை மத்திய வங்கி அனுமதி அளித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு வசதிகளை மேம்படுத்தும் முகமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மத்திய வங்கி மேலும் 13 நாடுகளின் வெளிநாட்டு நாணயங்களை சர்வதேச வங்கி நடவடிக்கைகளுக்காக இலங்கையில் பயன்படுத்தவும் அனுமதி அளித்துள்ளது. இவற்றில் அவுஸ்ரேலிய டொலர், கனேடியன் டொலர், டொன்மார்க் க்ரோனர், யூரோ, ஹொங்கொங் டொலர், ஜப்பானிய யென், நியூசிலாந்து டொலர், நோர்வே க்ரோனர், ஸ்டெர்லிங் பவுண், சிங்கப்பூர் டொலர்,சுவிஸ் பிராங்க் மற்றும் அமெரிக்க டொலர் என்பன அடங்கும்.

## உத்தியோக மொழி கொள்கையை நடைமுறைப்படுத்த கனடா உதவி



(கொழும்பு)

உத்தியோகபூர்வ மொழிகள் கொள்கையை நடைமுறைப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு கனடா உதவி வழங்க முன்வந்துள்ளது.

இந்த கருத்தூட்டத்திற்காக 5.6 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்க தீர்மானித்துள்ளதாக சர்வதேச கூட்டுறவுக்கான கனேடிய அமைச்சர் அறிவித்துள்ளார்.

கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர் அமைப்பின் ஊடாக இந்த உதவித் தொகை வழங்கப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கனேடிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இலங்கையின் நிலையான பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான நோக்கமாக கொண்டுள்ளதாக சர்வதேச கூட்டுறவுக்கான கனேடிய அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உத்தியோகபூர்வ மொழிகளைப் பாதுகாக்கும் மற்றும் அவற்றை மேம்படுத்தும் நடைமுறை ரீதியிலான அனுபவத்தையிட்டு கனடா பெருமையடைவதாக அந்த நாட்டின் அமைச்சர் கூறியுள்ளார்.

1950ஆம் ஆண்டு கொழும்புத் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டது முதல் இன்று வரையில் அபிவிருத்திக் கூட்டுறவில் நீண்ட கால வரலாற்றை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்ல மனோ கணேசன் தெரிவித்தார்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் இல்லையென்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவிக்கின்றார்.

அரசாங்கமும் சிங்கள மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சிங்கள நாளேடான லக்பிம பத்திரிகைக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் நேர்மையாக நடந்து கொள்ளும் என்று நான் நம்பத் தயாராக இல்லை. இருந்தாலும் தமிழ் மக்கள் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழத்தக்கதான முறையில் அவர்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் இருக்க வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கையாகும்.

வடமாகாண சபைக்கான தேர்தலை கூடிய விரைவில் நடத்தி அப்பிரதேசத்தின் நிர்வாகத்தை மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அதிகாரிகள் கையில் ஒப்படைக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் மனோ கணேசன் தனது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## புகைத்தல் பொருட்களின் பெட்டிகளில் பாதிப்புக்களை சித்திரிக்கும் காட்சிகள்

(கொழும்பு)

புகைப்பிடித்தலால் ஏற்படுகின்ற பாதிப்புகளை சித்திரிக்கக் கூடிய காட்சிகளை புகைப்பிடிக்கும் பொருட்களின் பெட்டிகளில் பிரசுரிப்பதைக் கட்டாயப்படுத்தும் ஒழுங்கு விதி விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் கார்லோ பொன்சேகா நேற்றுத் தெரிவித்தார்.

புகையிலைப் பாவனையிலிருந்து நாட்டை விடுவிப்பதற்காக உழைத்து வரும் இலங்கை ஜீவக்கமன்றம் நேற்று முன்தினம் ஒழுங்கு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை பத்திரிகை மன்றத்தில் ஜீவக்க மன்றத்தின் தலைவி மஞ்சரி பீரிஸ் தலைமையில் நடைபெற்ற இச் செய்தியாளர் மாநாட்டில் பேராசிரியர் கார்லோ பொன்சேகா மேலும் கூறுகையில், புகையிலை பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் ஆசியக் கண்டத்தில் கையெழுத்திட்ட முதலாவது நாடு இலங்கையாகும்.இப்பிரகடனத்தில் 2005ஆம் ஆண்டில் தான் இந்நாடு கைச்சாத்திட்டது. இதற்கேற்ப 2006ஆம் ஆண்டில் 27ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டது. இதனூடாகப் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும், புகையிலைப் பாவனையால் ஏற்படுகின்ற பாதிப்புகளை சித்திரிக்கக் கூடிய காட்சிகளை புகைப்பிடிக்கும் பொருட்களைக் கொண்ட பெட்டிகளில் பிரசுரிக்கும் முறை இற்றைவரையும் நடைமுறைக்கு கொண்டு வரப்படவில்லை

## ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாவக்குடிச்சேனை பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

5 கிலோ கிராம் நிறையுடைய ஒரு கைக்குண்டு, சீ 4 ரக வெடிபொருள் 1.8 கிலோ கிராம், ரீ 56 ரக மெகஸின் 5, ரீ 56 ரக ரவைகள் 107, ரீ 56 ரக டூல் கிட் 1, 20 மீற்றர் நீளமுடைய வயர் ரோல், 3 சயனட் குப்பிகள், 4 கைக்குண்டு மற்றும் புலிகள் இயக்கத் தகடு ஒன்று உள்ளிட்ட சில வெடிபொருட்கள், ஆயுதங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட ஆயுதங்கள் வவுணதீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதோடு, வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விடுதலைப் புலிகள் திருகோணமலையில் புதைத்து வைத்துள்ள தொண்ணூறு கோடி பணத்தை கண்டுபிடிக்க தேடுதல் வேட்டை

(திருகோமலை)

புலிகளினால் திருகோணமலையில் புதைத்து வைக்கப்பட்டுள்ள தொண்ணூறு கோடி ரூபாவை தேடிப்பிடிக்கும் முயற்சியில் பாது கப்புத்தரப்பினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்டத்தில் பலமாக இயங்கிய காலப்பகுதியில் இந்தப் பணம் பிளாஸ்டிக் கொள்கலன்களில் இட்டு தம்பலகாமத்தை அண்மித்துள்ள சூரங்கல் பிரதேசத்தில் புதைத்துவைத்துள்ளதாக கிடைத்துள்ள இரகசியத் தகவலொன்றையடுத்தே அதனைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளை பொலிசாருடன் இணைந்து இராணுவத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தை விடுவிக்கும் நோக்கில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாகவே புலிகள் அந்தளவு பாரிய தொகைப் பணத்தை பூமிக்கடியில் புதைத்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பணத்தொகையைப் புதைத்து வைப்பதில் முக்கிய பங்காற்றிய புலிகளின் முக்கியஸ்தர்கள் மூவரில் இருவர் இராணுவத்தினருடனான மோதல்களின் போது கொல்லப்பட்டுவிட்டனர். மற்றொருவர் வெளிநாட்டுக்குத் தப்பியோடிவிட்டார் என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

18. பெயராகவும் வினையாகவும் நிற்கும் சொல்?
 1. செய்தான்  2. திரி  3. இருள்  4. கோழி

19. ஒரு நிகழ்வின் ஆரம்ப விழா.
 1. பவள விழா  2. நூற்றாண்டு விழா  3. கால்கோள் விழா  4. வெள்ளி விழா

20. ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்நூலைப் பற்றி எழுதும் உரை.
 1. பதிப்புரை  2. முன்னுரை  3. நன்றியுரை  4. நூன்முகம்

21. 4550 ml எண்ணெயை 50 ml அடங்கிய எத்தனை போத்தல்களில் அடைக்கலாம்?
 1. 41 போத்தல்கள்  2. 71 போத்தல்கள்  3. 91 போத்தல்கள்  4. 90 போத்தல்கள்

**இலங்கை அரசியல் தலைவர்களின் உருவப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. படங்களுக்குரிய பொருத்தமான பெயரைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

22.



.........................................................................

23.



.........................................................................

23.



.........................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I, II
விடைகள்

# கல்வி முரசு

வெளியீடு 20



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்**

## பகுதி -I

| | | | |
|---|---|---|---|
| 1. | 2 | 23. | குறடு |
| 2. | [3] | 24. | சதுரமணியாசு |
| 3. | (S) | 25. | 5 |
| 4. | S | 26. | 8, 2 |
| 5. | Son / மகன் | 27. | 16, 11 |
| 6. | சேவல் | 28. | B |
| 7. | காகம் | 29. | மகன் / பெறாமகன் |
| 8. | கழுகு | 30. | I. ரூபா 87.00<br>II. ரூபா 113.00 |
| 9. | குயில் | | |
| 10. | (1) | 31. | Rat / RAT |
| 11. | (2) | 32. | dog / DOG |
| 12. | 3 | 33. | Deer / DEER |
| 13. | 1 | 34. | C |
| 14. | 3 | 35. | 3/6 / 1/2 |
| 15. | 3 | 36. | 24 சென்ரிமீற்றர் |
| 16. | 2 | 37. | 20 சென்ரிமீற்றர் |
| 17. | 2 | 38. | ஆற்றில் போட்டாலும் அளந்து போடு |
| 18. | 3 | | |
| 19. | 350 | 39. | இளமையிற் கல்வி சிலையில் எழுத்து |
| 20. | I. சசி II .54 | | |
| 21. | 11 ஆம் திகதி | 40. | உப்பிட்டவரை உள்ளளவும் நினை |
| 22. | துறப்பணம் | | |

## பகுதி -II

01. 1. கூடைப் பந்து விளையாட்டு
 2. 1891
 3. Dr.ஜேம்ஸ் A.நய்ஸ்மித்
 4. மரக்கூடைகளை அமைத்து விளையாடியதால்
 5. கால்பந்து, பேஸ் போல்
 6. மெஸ்ஸா சூஸட்ஸ்
 7. Soprt / SPORT
 8. Lader / LADER
 9. help / HELP
 10. Teacher / TEACHER

02. 1. நாட்டின் தலைவர், உடல் வலிமை, மனோவலிமை
 2. வீரம்
 3. தமிழர்
 4. முஸ்லிம்கள்
 5. சிங்களவர்

03. 12

04. 14

05. வேகத்தின் வரையறை

06. பாதுகாப்பான புகையிரதக் கடவை

07. சகல வாகனங்களும் உட்செல்லத்தடை

08. வழிவிடவும்

09. பாடசாலைக்கு அருகில் வைத்தியசாலை இருக்கிறது.

10. தேயிலைச் செடியில் ஈரிலையும் அரும்பும் கொண்ட தேயிலைக் கொழுந்துகள் பறிக்கப்படும்.

11. உலகின் முதலாவது இலத்திரனியல் கணினி "எனியாக்" ஆகும்.

12. மோனாலிசா ஓவியம் லியானாட்டோ டாவின்சி என்பவரால் வரையப்பட்டது.

13. காந்தியடிகள் எழுதிய "சத்தியசோதனை" அவரது சுயசரிதையாகும்.

14. நேற்றுப் பெய்த மழையின் காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

15. -

16. 57

17. மோட்டார் சைக்கிள்

18. சைக்கிள்

| | | | |
|---|---|---|---|
| 19. | 20 | 20. | 2 |
| 21. | 3 | 22. | 3 |
| 23. | 3 | 24. | 4 |
| 25. | 1 | 26. | 2 |
| 27. | 4 | 28. | 1 |
| 29. | 2 | 30. | 2 |
| 31. | 4 | 32. | 1 |
| 33. | 3 | 34. | 2 |
| 35. | 2 | 36. | 1 |
| 37. | 3 / 4 | 38. | 2 |
| 39. | 1 | 40. | 4 |

**பின்வருவனவற்றைப் பிரதி செய்து விடை காணுங்கள்.**

01. பெட்டியொன்றில் 8 சவர்க்காரக் கட்டிகள் வீதம் 308 சவர்க்காரக் கட்டிகள் அடுக்குவதற்கு எத்தனை பெட்டிகள் தேவை? எத்தனை சவர்க்காரக் கட்டிகள் எஞ்சியிருக்கும்?

..........................................................................  ..........................................................

02. பொதியொன்றில் 840 புத்தகங்கள் உள்ளன. ஒரு பிள்ளைக்கு 7 புத்தகங்கள் வீதம் எத்தனை பிள்ளைகளுக்குக் கொடுக்க முடியும்?

..........................................................................................................................

**பின்வருவனவற்றை எண்குறிகளில் எழுதுங்கள்**

03. நான்காயிரத்து நானூற்று நான்கு

..........................................................................................................................

04. ஏழாயிரத்து ஐம்பத்தெட்டு

..........................................................................................................................

**பின்வருவனவற்றை சொற்களில் எழுதுங்கள்**

05. 5048

06. 6008


**பின்வருவனவற்றை உரோமன் எண்குறிகளில் காட்டுங்கள்**

07. பத்து

08. பதின்மூன்று


**ஒவ்வோர் உருவினதும் சுற்றளவைக் காணுங்கள்**

07.




..........................................................

08.




..........................................................



**விடை எழுதுங்கள்**

09. 3/7 + 1/2 =

10. 5/6 - 1/3 =

11. 8/10 =

12. 5/10 =

**பின்வருவனவற்றைத் தீருங்கள்**

13. பெட்டியொன்றில் 32 சவர்க்காரக் கட்டிகள் வீதம் 14 பெட்டிகளில் உள்ள சவர்க்காரக் கட்டிகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................................................................

14. மண்டபமொன்றில் நிரையொன்றில் 10 கதிரைகள் வீதம் 87 நிரைகளில் கதிரைகள் உள்ளன. மண்டபத்தில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................................................................

15. மீன் தாங்கியொன்றில் 5 L 375 ml நீர் உள்ளது. அதற்கு 4 L 650 ml நீரை ஊற்றினால் தாங்கியில் இருக்கும் நீரின் மொத்தக் கனவளவு யாது?


..........................................................................................................................

16. தாங்கியொன்றிலிருந்து 2 L 800 ml நீரைப் பயன்படுத்திய பின்னர் 4 L 850 ml நீர் எஞ்சியிருந்தது. தாங்கியில் முதலில் இருந்த நீரின் கனவளவு யாது?

..........................................................................................................................

**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

17. இதன் சுற்றளவு யாது?




1. 11 சென்ரி மீற்றர்
2. 28 சென்ரி மீற்றர்
3. 15 சென்ரி மீற்றர்
4. 22 சென்ரி மீற்றர்

# ரோமங்கள் அற்ற மனிதக்குரங்கு



பொதுவாக மனிதக்குரங்குகள் என்றாலே உடல் முழுக்க ரோமங்களாக இருக்கும். ஆனால் 14 வயதான இந்த பெண் மனிதக் குரங்குகின் உடலில் ஒரு ரோமம் கூட இல்லாமல் இருக்கிறது. தற்போது இந்த மனிதக்குரங்கு Saint Louis என்ற மிருகக்காட்சி சாலையில் வசித்து வருகிறது.

# நாணய ஆடை

1 மில்லியன் மதிப்புடைய இந்த ஆடை ஜப்பானில் உள்ள Bunka பேஷன் கல்லூரியை சோந்த மாணவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆடையில் 1500 அவுஸ்ரேலிய டொலர்கள் பொருத்தப்பட்டுள்ளது. ஆடையின் மொத்த எடை 10 கிலோ ஆகும்.





# தொடுவதற்குமா!



சவூதி இளவரசரான Alwaleed Bin Talaக்கு சொந்தமான இந்த கார் முழுக்க முழுக்க வைரக் கற்களால் பதிக்கப்பட்டது. இந்தக் காரின் மதிப்பு 4.8 மில்லியன் டொலர்கள் ஆகும். இந்த காரைத் தொட்டுப் பார்ப்பதற்கு 1000 டொலர்கள் வசூலிக்கப்படுகிறது.

# தேள்களின் ராணி



தாய்லாந்தைச் சோந்த Kanchana Kaetkaew என்பவர் 33 நாட்கள் 5000 தேள்களுடன் தனி அறையில் இருந்து கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார். 39 வயதான Kanchana என்பவர் செய்த மற்றொரு சாதனை விஷத்தன்மை உள்ள தேளை 2 நிமிடம் அவருடைய வாயில் வைத்து சாதனை படைத்துள்ளார். தேள்களின் ராணி Kanchana என்பவரால் படைக்கபபட்ட மிகவும் ஆபத்தான இந்தச் சாதனைக்கு அவருடைய கணவரும் உற்ற துனையாக இருந்துள்ளார்.

# மார்பகப் புற்றுநோயைத் தடுக்க

தினமும் 3 மணிநேரம் சூரியஒளி உடல்மேல் பட்டால் மார்பக புற்றுநோய் வரவே வராது என்கிறார்கள் கனடா நாட்டு ஆராய்ச்சியாளர்கள். இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது: சூரிய ஒளி உடல் மேல் படும் போது வைட்டமின் 'டி' உற்பத்தி தூண்டப்படுகிறது. மார்பக செல்கள், வைட்டமின் 'டி'யை ஒருவித ஹோர் மோனாக மாற்றும் திறன் பெற்றவை. இந்த ஹோர்மோன் தான் மார்பகத்தில் புற்றுநோய் வராமல் தடுக்கிறது.



இளம், நடுத்தர மற்றும் வயதான பெண்களிடம் ஆய்வுகள் நடத்தப்பட்டு இது கண்டுபிடிக்கப்பட்டது. தினமும் 3 மணி நேரம் சூரிய ஒளி உடல் மேல் படும்படி பார்த்துக் கொண்டால் மார்பக புற்றுநோய் ஆபத்தில் இருந்து விடுபடலாம். ஆண் களைப் பொறுத்த வரை வைட்டமின் 'டி' மாரடைப்பு போன்ற ஆபத்து களில் இருந்து காக்கிறதாம்.

# ஆங்கிலச் சொற்களின் திறனை வளர்க்க...

ஒன்லைன் மூலம் எண்ணற்ற பல சேவைகள் இன்றும் நமக்கு கிடைத்துக் கொண்டுதான் இருக்கிறது. அந்த வகையில் இன்று ஆங்கில Vocabulary -ஐ மேம்படுத்துவதற்கு வசதியாக ஒன்லைன் மூலம் விளையாடும் விளையாட்டு வந்துள்ளது. எந்த ஒரு மொழியிலும் சொல்வளம் தெரிந்தால் அந்த மொழியில் நாம் வல்லவர்களாக இருக்கலாம். இதே போல்தான் ஆங்கில மொழியில் சொல்வளம்(Vocabulary) அதிகரிக்க நமக்கு ஒரு தளம் உதவுகிறது. எதையும் விளையாட்டாகக் கூறினால் பலரும் ஏற்றுக்கொள்வர் என்பதை மனதில் கொண்டு ஆங்கிலச் சொல்வளத்தை வைத்து ஒன்லைன் விளையாட்டு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தளத்திற்கு சென்று நாம் புதிதாக ஒரு இலவச பயனாளர் கணக்கு உருவாக்கி கொண்டு நுழையலாம். ஆரம்ப நிலையில் இருப்பவர்கள் முதல் Expert வரை அனைவரும் தங்களுக்கு தகுந்தபடி Level ஐ தேர்ந்தெடுத்து விளையாடலாம். தினமும் டிக்ஸ்னரியில் பல வார்த்தைகள் படிப்பதை கொள்கையாக வைத்திருப்பவர்கள் இனி ஒன்லைன் மூலம் எங்கிருந்து வேண்டுமானாலும் இந்த விளையாட்டை விளையாடி தங்களின் Vocabulary அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

இணையமுகவரி:- http://vocabgenii.com/

# குரலை மாற்றுவதற்கு...




ஆண்கள் பேசும் குரலும் பெண்கள் பேசும் குரலும் தனியாகத் தெரியும் ஆனால் மொபைல் போன்களில் ஆண்கள் பேசும் குரலை அப்படியே பெண்கள் பேசுவது போல் மாற்ற ஏற்கனவே பல மென்பொருட்கள் உள்ளன, ஆனால் கணினியில் ஆண்கள் பேசும் குரலை அப்படியே நேரடியாக பெண்கள் பேசுவது போல் மாற்ற ஒரு மென்பொருள் உள்ளது.


தரவிரக்க முகவரி:- http://www.screamingbee.com/product/MorphVOXJunior.aspx

மேலே கொடுத்திருக்கும் முகவரியை சொடுக்கி இந்த மென்பொருளை இலவசமாக தரவிரக்கி நம் கணினியில் நிறுவலாம். மென்பொருளை இயக்கி யாருடைய குரலில் கேட்க வேண்டுமோ அதை தேர்ந்தெடுத்து நாம் பேசினால் போதும், உதாரணமாக ஒரு ஆண் பேசும் போது பெண் குரலை தேர்ந்தெடுத்து விட்டு பேச ஆரம்பித்தால் அது பெண் பேசுவது போல் இருக்கும். Man , Tiny Folks , Woman என்ற மூன்று விதமான ஆப்சன் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும். இதில் Tiny Folks என்பது கார்டூன் கேரக்டர் பேசுவது போல் இருக்கும். பல சமயங்களில் சாட்டிங்கில் பேசுவது பெண்தான் என்று நினைத்திருப்போம். உண்மையிலே அவர் இது போன்று இருக்கும் மென் பொருளைப் பயன்படுத்திதான் பேசிக்கொண்டிருப்பார். வேடிக்கைக்காக ஆண் குரலைப் பெண் குரலாகவும் பெண் குரலை ஆண் குரலாகவும் மாற்ற விரும்பும் அனைவருக்கும் இந்தப்பதிவு பயனுள்ளதாக இருக்கும்.

கணினி மூலை

# சிறுபான்மை அரசாக இருந்ததால்தான் தீர்வுக்கு வலியுறுத்த முடியவில்லை

## விளக்கமளிக்கிறார் திருமாவளவன்



(சென்னை)

**தி.மு.க. அரசு சிறுபான்மை அரசாக இருந்ததால்தான் அதனால் இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண மத்திய அரசை வலியுறுத்த முடியவில்லை என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.**

நெல்லையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் சென்ற விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் தேவை. அப்போதுதான் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்கும், தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கும் நிரந்தரத் தீர்வு கிடைக்கும்.

ஈழத் தமிழர்கள் பிரச்சினை சர்வதேச சிக்கல்கள் நிறைந்தது. இந்த விஷயத்தில் இலங்கைக்கு சீனா,ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் ஆதரவாக உள்ளன. எனவே மத்திய அரசு அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து இலங்கை ஜனாதிபதியை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு திருமாவளவன் தெரிவித்துள்ளார். திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கடந்த தேர்தலில் தி.மு.க அணியில் இணைந்து போட்டியிட்ட பத்து தொகுதிகளிலும் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# கச்சதீவு அருகே மீன்பிடிக்க இந்தியாவிலிருந்து வந்த 3500 மீனவர்களை இலங்கை கடற்படை விரட்டியது

(ராமேஸ்வரம்)

கச்சதீவு அருகே எல்லை தாண்டி மீன்பிடிக்க வந்த 3 ஆயிரத்து 500 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர விரட்டினர்.


ராமேஸ்வரத்தில் இருந்து 700 படகுகளில் 3 ஆயிரத்து 500 மீனவர்கள் இந்தியக் கடல் எல்லை தாண்டி இலங்கைக்குச் சொந்தமான கச்சதீவு கடல் அருகே மீன்பிடித்துச் செல்ல வந்துள்ளனர். ரோந்து சென்ற இலங்கை கடற்படையினர், மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்களை விரட்டியுள்ளனர்.

திரும்பிச் சென்ற தமிழக மீனவர்கள் அங்கு இலங்கை கடற்படையினரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். கடற்படையினரின் செயலால் ஒவ்வொரு மீனவருக்கும் தலா ரூ. 17 ஆயிரம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என அந்த மீனவர்கள் தமிழக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படையின் இந்தச் செயல் கடும் கண்டனத்திற்கு உரியது எனவும், அடிக்கடி கடலில் அத்துமீறும் இலங்கை கடற்படை குறித்து சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர ஆலோசனை நடத்தி வருவதாகவும் மீனவ அமைப்பு பிரநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியச் செய்திகள்

# ராஜ்யசபா எம்.பி.தேர்தலில் வேட்பாளராக ரபி பெர்னார்ட்டை நிறுத்துகிறது அ.தி.மு.க.



(சென்னை)

ராஜ்யசபா எம்.பி. தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளராக வில்லியம் ரபிபெர்னார்ட் போட்டியிடுகிறார். இவர் தற்போது ஜெயா ரி.வியின் நிர்வாகியாக இருந்து வருகிறார். இவர் போட்டியிடுவதற்கான அறிவிப்பை முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ளார்.

எம்.பியாக இருந்த ஈரோடு கே.பி.ராமலிங்கம், சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டு எம்.எல்.ஏ.வாகி அமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ளார். இதையடுத்து, தனது எம்.பி. பதவியை ராமலிங்கம் ராஜினாமா செய்தார். அந்த இடத்துக்கான தேர்தல் அடுத்த மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கே அ.தி.மு.க. சார்பில் வில்லியம் ரபிபெர்னார்ட் போட்டியிடுகிறார்.

ராஜ்யசபா உறுப்பினர்களை எம்.எல்.ஏ.க்களே வாக்களித்து தேர்ந்தெடுக்க வேண்டும். தமிழக சட்டசபையில் அ.தி.மு.க.வுக்கு தனிப் பெரும்பான்மை இருப்பதால், அந்தக் கட்சி சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர், எம்.பி.யாகும் வாய்ப்பு உள்ளது. எனவே, ரபிபெர்னார்ட் போட்டியின்றி எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்படுவார்.

# யூலை 3 கோலிவுட்டில் நட்சத்திர திருமணங்கள்





(சென்னை)

நடிகர் கார்த்தி - ரஞ்சனி மற்றும் இயக்குநர் செல்வராகவன் - கீதாஞ்சலி இரண்டு ஜோடிகளின் திருமணமும் தமிழகத்தில் வரும் 3ஆம் திகதி நடக்கிறது. நட்சத்திர தம்பதிகளை வாழ்த்த கோடம்பாக்கம் தயாராகிறது.

நடிகர் சிவகுமார் மகனும் நடிகருமான கார்த்திக்கும், ஈரோட்டைச் சேர்ந்த சின்னசாமி ஜோதி மீனாட்சி தம்பதியின் மகள் ரஞ்சனிக்கும் திருமணம் நடக்கிறது. மணப்பெண் மற்றும் குடும்பத்தினருக்கான புடவைகள், நகைகள் தேர்வு செய்யும் பணியில் அண்ணன் சூர்யா மனைவி ஜோதிகா தீவிரமாக ஈடுபட்டுள்ளாராம்.

கார்த்திக்கு திருமணமாகும் அதே ஜூலை 3ஆம் திகதி இயக்குநர் செல்வராகவனுக்கும் அவரது காதலி கீதாஞ்சலிக்கும் திருமணம் நடக்கிறது. இந்தத் திருமணத்தில் சிகிச்சை முடிந்து திரும்பியிருக்கும் ரஜினிகாந்த் பங்கேற்பார் என்று தெரியவருகிறது.

நடிகை சோனியா அகர்வாலை பல ஆண்டுகள் காதலித்து திருமணம் செய்த செல்வராகவன், கருத்து வேறுபாடு காரணமாக அவரை விவாகரத்து செய்தார்.

இந்த விவாகரத்து நடந்த சில மாதங்களுக்குள் மீண்டும் செல்வராகவனுக்கு காதல் பூத்துவிட்டது கீதாஞ்சலி என்ற பெண்ணுடன். தமிழக அரசின் அட்வகேட் ஜெனரல் பி.எஸ். ராமனின் மகள் இவர்.

செல்வராகவன் தற்போது தனது தம்பி தனுஷ் - ஆன்ட்ரியாவை வைத்து இயக்கிவரும் இரண்டாம் உலகம் படத்தின் உருவாக்கத்தின் போதுதான் கீதாஞ்சலியுடன் காதலில் விழுந்தாராம். இந்தப் படத்தில் உதவி இயக்குநராகப் பணியாற்றுகிறார் கீதாஞ்சலி என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தப் படமே எனது கடைசிப் படம்; கண்ணீருடன் விடைபெற்றார் நயன்தாரா

(ஹைதராபாத்)

நயன்தாரா சினிமாவிலிருந்து விலகிவிட்டார். தெலுங்கில் அவர் நடித்த சிறீராம ராஜ்யம்தான் அவரது கடைசிப் படம். இந்தப் படப்பிடிப்பின் கடைசி தினம், படப்பிடிப்புக் குழுவினரிடமும், ரசிகர்களிடமும் கதறி அழுதபடி விடைபெற்றார் நயன்தாரா. இனி நான் நடிக்கமாட்டேன். உங்களை படப் பிடிப்பில் சந்திப்பது இதுவே கடைசி என்று கூறிவிட்டுச் சென்றார்.

வில்லு படத்தில் நடித்த போது நடிகை நயன்தாராவுக்கும், நடிகர்-இயக்குநர் பிரபுதேவாவுக்கும் தொடர்பு ஏற்பட்டது. நயன்தாரா திருமணம் ஆகாதவர். பிரபுதேவாவுக்கு திருமணமாகி மனைவியும், 2 குழந்தைகளும் இருக்கிறார்கள். இவர்கள் காதலுக்கு ஆரம்பத்தில், பிரபுதேவாவின் மனைவி ரம்லத் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.



அதையும் மீறி நயன்தாரா-பிரபுதேவா காதல் தொடர்ந்தது.

நயன்தாராவின் காதலுக்கு விலையாக ரம்லத்தை விவாகரத்து செய்ய நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார் பிரபுதேவா. நஷ்டஈடாக ரம்லத்துக்கு பல கோடி சொத்துக்களை கொடுத்துள்ளனர் பிரபு தேவாவும் நயன்தாராவும்.

திருமணத்துக்குப்பின் நயன்தாரா சினிமாவில் நடிக்கக் கூடாது என்று பிரபுதேவா கண்டிப்புடன் கூறியிருக்கிறார். அதற்கு நயன்தாராவும் சம்மதம் தெரிவித்து இருக்கிறார்.

# தனியாரிடம் மின்சாரம் வழங்குமாறு கோரி நிற்கும் தமிழக அரசு

தமிழகத்தின் மின்தேவையைப் பூர்த்தி செய்ய தனியார் நிறுவனங்களிடம் இருந்து மின்சாரம் பெற தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

தமிழகத்தின் மின்சாரத்தேவையை நிறைவு செய்ய வெளி மாநிலங்களில் இருந்து இரண்டாயிரம் மெகாவாட் மின்சாரம் பெறப்படுகின்றது. மொத்தமாக 12 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தமிழக அரசுக்கு தேவை தமிழக அரசுக்கு மூன்று ஆயிரம் மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறை நிலவிவருகின்றது. இதனை தீர்க்க தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து 5 ஆண்டுகள் ஒப்பந்தத்தில் 400 மெகாவாட் மின்சாரம் பெற தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

மின்சாரம் வழங்கத்தயாரான தனியார் நிறுவனங்களிடம் இருந்து கேள்விகள் கோரப்பட்டுள்ளன. இந்த வருடம் டிசம்பர் மாதம் முதல் 2010ஆம் ஆண்டுவரைக்குமே இந்த மின்சாரம் பெற கேள்விகள் கோரப்பட்டிருக்கின்றன.

# பிரதமரைச் சந்தித்தார் தயாநிதி மாறன் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்?

(புதுடில்லி)

அமைச்சரவை மாற்றி அமைக்கப்படலாம் என்று கூறப்படும் நிலையில் திமுகவைச் சேர்ந்த மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் நேற்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார். அவர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்படக்கூடும் என்று தெரிகிறது.

தயாநிதி மாறன் மத்திய அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படுவது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அரசியல்ரீதியான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் தயாநிதியின் பெயர் அடிபடத் தொடங்கியதையடுத்து அவர் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படக்கூடும் என்று முன்னதாக செய்திகள் வெளியாகி வந்தன.

2ஜி ஊழலில் திமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஆ.ராசா மற்றும் கனிமொழி ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.



2ஜி ஊழல் வழக்கில் தயாநிதி மாறனுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய சி.பி.ஐ தயாராகி வருகிறது. 2ஜி உரிமங்கள் வழங்கப்பட்டபோது ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முதல் ஐந்தாண்டு காலத்தில் மாறன் தொலைத் தொடர்பு அமைச்சராக பணியாற்றியுள்ளார். அரசியல் ரீதியாக தி.மு.க வலுவிழந்துள்ள நிலையில் தயாநிதி மாறன் பதவியில் இருந்து நீக்கப் பட்டால் திமுகவும் மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்க முடியாது என்று தெரிகிறது.

# கம்யூனிஸ்ட் கட்சி விழா; சீனாவில் விழாக்கோலம்

உலகச் செய்திகள்

(பீஜிங்)

சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டதன் 90ஆம் ஆண்டு விழாவை (இன்று ஜுலை 1ஆம் திகதி), சீன மக்கள் கோலாகலமாக கொண்டாடு கின்றனர். விழா தலைநகர் பீஜிங்கில் தொடங்கியது. 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொண்ட கலைநிகழ்ச்சிகள் நடந்தன. விழாவை ஜனாதிபதி ஹஜிந்தாபோ தொடங்கி வைத்தார்.

இதில் பிரதமர் வென் ஜியாபோ, மற்றும் சீன கம் யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள்,நாட்டின்பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர். முக்கிய நிகழ்ச்சியாக இன்று ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் உரைகள் இடம்பெறுகின்றன.

# அரசியல் நடவடிக்கைகளை நிறுத்தும்படி ஆங் சான் சூகிக்கு மியான்மர் அரசு கட்டளை

(யாங்கூன்)

மியான்மர் ஜனநாயக தலைவர் ஆங் சான் சூகியும், அவரது கட்சியும் தங்களது அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என மியான்மர் அரசு கட்டளையிட்டுள்ளது.

மியான்மரில், கடந்தாண்டு ஆட்சியில் இருந்த இராணுவம், புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டு வந்தது. அதன்படி, புதிய தேர்தல் ஆணையகத்தில், சூகியின் 'தேசிய ஜனநாயக லீக் கட்சி' பதிவு செய்து கொள்ளவில்லை. கடந்த நவம்பரில் நடந்த பொதுத் தேர்தலையும் புறக்கணித்தது. இதனால், இராணுவ ஆட்சியாளர்களால் சூகியின் கட்சியைக் கலைக்க உத்தர விடப்பட்டது. கடந்த நவம்பரில், சூகி விடுதலை செய்யப்பட்ட பின், அவரது கட்சி பல்வேறு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்யப் போவதாகவும் சூகி சமீபத்தில் அறிவித்திருந்தார்.



இந்நிலையில், சூகிக்கு கடிதம் எழுதியுள்ள மியான்மர் உள்துறை அமைச்சகம், அதில், சூகியும், அவரது கட்சியினரும் உண்மையில் ஜனநாயக ரீதியில் கடமையாற்ற விரும்பினால், நாட்டின் அமைதி மற்றும் ஒழுங்கைக் குலைக்கும் முயற்சியைக் கைவிட்டு, சட்டப்படி நடந்து கொள்ள வேண்டும். அரசியல் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொரில்லாவை தத்தெடுத்த தம்பதி

(லண்டன்)

பிரான்ஸ் நாட்டின் விலங்குகள் காப்பகத்தில் இருந்து பெர்ரி - எலைன் திவிலான் என்னும் வயதான தம்பதியினர் கொரில்லா குட்டியை தத்தெடுத்துள்ளனர். அதற்கு டிஜிட் என பெயர் சூட்டி, புட்டிப்பால் கொடுத்து, இவர்கள் தங்கள் குழந்தையைப்போல் வளர்க்கத் தொடங்கினர்.

இப்போது அது பெரியதாக வளர்ந்து விட்ட போதிலும் பெர்ரி தம்பதியர் அதனிடம் எந்த பயமும் இன்றி பழகுகின்றனர். அது அவர்களுடன் விளையாடுவதும், மகிழ்ச்சியுடன் முத்தத்தை பரிமாறிக் கொள்வதும் பார்ப்பவரை ஆச்சரியமடைய வைக்கிறது. தற்போது 80 கிலோ எடையுள்ள டிஜிட் சுமார் 50 வயது வரை வாழக்கூடியது என்கின்றனர் இந்த தம்பதியினர்.

## ஜப்பானில் மீண்டும் நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை இல்லை

(டோக்கியோ)

ஜப்பானின் நகனோ மாகாணத்தில் நேற்று 5.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 7 பேர் காயமடைந்தனர். இருப்பினும் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை.

நகனோ மாகாணத்தின் பல பகுதிகளில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியில் சிக்கி 7 பேர் காயமடைந்தனர். நேற்றுக் காலை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

மத்திய நகனோ மாகாணத்தில்அடியில் நிலநடுக்கத்தின் மையப் புள்ளி இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 5.1 ரிச்டர் அளவிலான இன்னொரு நிலநடுக்கமும், 4 ரிச்டர் அளவிலான நிலநடுக்கமும் ஏற்பட்டது.

## மொனாகோ இளவரசருக்கு நாளை காதல் திருமணம்

(லண்டன்)

மொனாகோ நாட்டின் இளவரசருக்கும், தென்ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த ஒலிம்பிக் நீச்சல் வீராங்கனைக்கும் இன்று (வெள்ளிக்கிழமை) அரச குடும்ப முறைப்படி திருமணம் நடக்கிறது. மொனாகோ நாட்டின் இளவரசர் இரண்டாம் ஆல்பர்ட் (53), தென்ஆபிரிக்க நீச்சல் வீராங்கனை சார்லினி விட்ஸ்டாக்கை (33) திருமணம் செய்து கொள்கிறார்.

கடந்த 5 ஆண்டுகளாக இருவரும் காதலித்து வந்தனர். 2010இல் இவர்களது திருமண நிச்சய தார்த்தம் மொனாகோ அரண்மனையில் நடந்தது.

இந்த அரசகுடும்ப திருமணத்தில் பிரான்ஸ் அதிபர் சர்கோஸி, சுவீடன் மன்னர் காரல் கௌஸ்டாப் மற்றும் உலகப்புகழ்பெற்ற மொடல் அழகி நௌமி கேம்பல் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்கின்றனர்.

# இன்னொரு 9/11 தாக்குதல் நடத்த ஓசாமா திட்டமிட்டிருந்ததாக அமெரிக்கா தெரிவிப்பு



(வொஷிங்டன்)

9/11 தாக்குதலின் 10ஆவது நினைவு நாளில் அமெரிக்காவில் அதே போன்று ஒரு தாக்குதல் நடத்த ஓசாமா பின்லேடன் திட்டமிட்டிருந்ததாக அமெரிக்கா கூறியுள்ளது.

ஓசாமாவின் அபோதாபாத் வீட்டில் இருந்து எடுக்கப்பட்ட ஆவணங்களில் ஓசாமா எதிர் வரும் செப்டம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தது தெரிய வந்துள்ளது என்று அமெரிக்க நாளிதழான தி நியூயோர்க் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானில் வைத்து பின்லேடன் கொல்லப்பட்டதை அடுத்து அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் 3 விடயத்தை எதிர்பார்க்கின்றனர் என அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அவர் இறக்கும் முன் இதற்கான திட்டம் ஏதும் தீட்டியிருந்தாரா? ஏமன் மற்றும் சோமாலியாவில் இருக்கும் அல்கொய்தாவினர் பின்லேடன் இடத்தை நிரப்ப ஏதாவது தாக்குதல் நடத்துவார்களா? வரும் செப்டம்பர் 11ஆம் திகதி பின்லேடன் மரணத்துக்கு பழிவாங்குவதாகக் கூறி யாராவது தாக்குதலுக்குத் திட்டமிடுவார்களா? இவையே அந்த சந்தேகங்கள். எப்படி இருந்தாலும், எந்த நிலைமை ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் வகையில் தனது பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்தியுள்ளது அமெரிக்கா.

# பதிவிறக்கப் பெட்டகம்

ரஸ்ஸல் எல்லா விதத்திலும் வழிகாட்டி என்று ஏற்கக்கூடிய எழுத்தாளர். ஆனால் அவரின் மனதும், மேதையும் சஞ்சலமானது. அவர் ஒவ்வொரு நாளும் முன்னேறிக் கொண்டே இருப்பார். நான் வீடு கட்ட வேண்டும் என்று அபிப்பிராயம் கேட்டால், முதலில் செங்கல்லினால் கட்டு என்று சொல்கிறார். அதைப் பிடித்துக்கொண்டு கட்டுவதில் முனைந்தபோது, சுண்ணாம்பில் கட்டுவதால் ஏற்படும் லாபத்தைப் பற்றி ஆரம்பிக்கிறார். போகட்டும், சுண்ணாம்புடன் ஆரம்பிக்கலாம் என்றால், சிமெண்ட் கொங்கிரீட்டை விடச் சிறந்தது கிடையாது என்கிறார். இதற்கு இடையில் எனக்குத் தங்குவதற்குக் குடிசை கிடையாது.

- சோமர்ஸெட் மாம

ஒவ்வொரு மொழியும் தன்னை அழியாப் புகழில் ஏற்றும் மகா காப்பியத்தைப் படைக்கும் ஆற்றல் கொண்ட தன் தலைமகனுக்காகத் தவமிருக்கிறது. அவன் பிறக்கும் வரை அது தன்னை மலடியாகவே கருதுகிறது. அப்படிப்பட்ட காப்பியம் பிறந்த பிறகு தாய்மையால் பூரிக்கிறது. தனக்கு இனி என்றுமே அழிவில்லை என்று இறுமாந்து கொள்கிறது. அந்தக் காப்பியம்தான் அந்த மொழிக்கும் அம்மொழி பேசும் மக்களுக்கும் அந்த தேசத்தையே உரிமையாக்கும் சாசனமாக பட்டயமாக அன்றுமுதல் மாறுகிறது. ஹீப்ரு மொழிக்கு ஒரு மோசஸ், கிரேக்க மொழிக்கு ஒரு ஹோமர், இலத்தீன் மொழிக்கு ஒரு விர்ஜில், இத்தாலிய மொழிக்கு ஒரு தாந்தே, ஆங்கில மொழிக்கு ஒரு மில்டன், வடமொழிக்கு ஒரு வால்மீகி, தமிழுக்கு ஒரு கம்பன். அதுபோல ஜெர்மன் மொழிக்கு ஒரு கதே. அவர் படைத்த காப்பியம் ஃபாஸ்ட்.

கடவுளும் என் தாய் தந்தையரும் எனக்கு உயிரையும் உடலையும் அளித்தனர் எனில், என் வாழ்வை எனக்கு அளித்தவர் கதே. எது மிகச் சிறந்த வாழ்வு? அதை வாழ்வது எப்படி? இந்த வினாக்கள் சிறு வயது முதலே என்னை அலைக்கழித்து வந்தன. இந்த வினாக்களுக்குத் தகுந்த பதிலை எனக்களித்தவர் கதே. என் வாழ்வில் பெரும் செல்வங்களை, அறிவுப் பொக்கிஷங்களை நான் அடைந்தது புத்தகங்களின் வாயிலாகத்தான். என்னுடைய சொர்க்கம் என்பது எல்லையில்லா ஒரு நூலகத்தில் உலகின் உன்னதங்கள் எல்லாவற்றையும் முடிவின்றி வாசித்துக் கொண்டிருப்பதுதான். என் வாழ்வின் பெரும்பகுதியை நூலகங்களில்தான் கழித்திருக்கிறேன். கதே என்ற பிரமாண்டமான புதையலை நான் கண்டெடுத்தது அங்குதான்.

- இரா. குப்புசாமி

விரும்பிப் படிக்கும் எழுத்தாளர்கள் எல்லாம், என்னுடைய சிருஷ்டிகரத்துக்குக் காரணமாக இருந்தார்கள் என்று சொல்ல முடியாது. அது வேறு. இது வேறு. ஞானத்தை உருவாக்க ஆழமான சம்பாஷணை,ஆழமான விஷயங்கள் மட்டும் காரணமாக இருக்கின்றன என்று சொல்ல முடியாது. புத்தர் வயதான ஒருவரைப் பார்க்கிறார். அது அவருக்குப் பெரிய சிக்கலாக உள்ளது. நமக்குச் சாதாரண விஷயங்களாகத் தெரிபவை பெரிய ஆளுமைகளுக்குப் பிரச்சினையாக இருக்கும். பிரமிள் சொல்வார், சாது அப்பாத்துரை சொன்னதாக. குருவிகள் செல்லும் பாதையையும், ஞானிகள் ஞானத்தை அடைந்த பாதையையும் வரைந்துகாட்ட முடியாது என்று. வண்ணத்துப்பூச்சி செல்லும் பாதையை வரைந்துவிட முடியுமா?

- சுரேஷ்குமார இந்திரஜித்

எனக்குப் பொதுவாக இந்திய எழுத்தாளர்களைப் பிடிக்காது. அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பது என் கருத்து. காந்தீயத்தின் நிழலிலேயே வளர்ந்து சூம்பிப் போய் விட்டவர்கள் அவர்கள். இன்றைய மனித வாழ்வின் சகல தளங்களிலும் நிறைந்திருக்கும் குரூரம் - இந்தியச் சமூகத்தில் காணப்படும் நம்பமுடியாத ஏற்றத்தாழ்வுகள் - சாதீய ஒடுக்குமுறைகள் - அரசியல் கோமாளித்தனங்கள் - மதத்தின் பெயரால் நடக்கும் வன்முறை எதையுமே இவர்கள் எழுத்தில் காணமுடியவில்லை. இவ்வளவு வெளிப்படையான பிரச்சினைகளே கவனிக்கப்படவில்லை என்கிறபோது பாலியலின் சிடுக்குகள் இவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது? பல ஆண்டுகளாக இவர்கள் ஜனனேந்திரியங்களே இல்லாத பாத்திரங்களைத்தான் உருவாக்கி உலவவிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

- சாரு நிவேதிதா

சாதாரண மனிதர்களைவிடப் படைப்பாளிகள்தான் பல வேலிகளுக்குள் அகப்பட்டுக் கிடக்கிறார்கள். பெண்ணியவாதி, மார்க்சியவாதி, தலித்தியவாதி என்று ஒரு சிறைக்குள் இருந்துகொண்டு உலகத்தை எட்டிப்பார்க்கிறார்கள். எழுத்தாளனுக்கு வேலிகளற்ற சுதந்திரம் வேண்டும். அவன் தன்னளவில் முழுமையான சுதந்திரம் உள்ளவனாக இருக்க வேண்டும். பாசாங்குகளையும் எழுத்தாளன் என்கிற அடையாளத்தையும் விட்டுவிட வேண்டும்.... காலத்தின் முன், சமூகத்தின் முன் எழுத்தாளன் வெறும் பார்வையாளன் மட்டுமே. சமூகத்தில் நிகழும் மாற்றங்களை நிஜமான கலைஞன் கூர்ந்து பார்க்கிறான். தான் பார்த்தவற்றை நேர்மையான முறையில் சார்பற்ற நிலையில் பதிவுசெய்கிறான். அப்படிச் செய்கிறவன்தான் கலைஞன். அப்படிச் செய்யப்படுவதுதான் கலைப் படைப்பு.

குரலற்றவர்களுக்குக் குரலைக் கொடுப்பவன் எழுத்தாளன். படைப்பு என்பது அறிதல். படைப்பாளியின் நோக்கம் அறிந்து கொள்ளுதல் மட்டுமே. அறிந்ததிலிருந்து அறியாததை நோக்கிய பயணம். அதாவது தேடல். அர்த்தத்திலிருந்து அர்த்தமின்மைக்கும், அர்த்தமின்மையிலிருந்து அர்த்தத்தை நோக்கியும் நகர்வது. இது கலைப் படைப்பின் நோக்கம் மட்டுமல்ல. கலைஞனின் நோக்கமும் கூட. உலகத்தில் பெரிய எழுத்தாளர்கள் என்று போற்றப்படுகிற எந்த எழுத்தாளனும் கோட்பாட்டை உருவாக்கிக்கொண்டு உன்னதமான படைப்பை உருவாக்கியதாக வரலாறுகள் இல்லை.

- இமையம்




யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் தினமும் - 2011 நேற்று முன்தினம் கல்லூரியின் மண்டபத்தில், கல்லூரி அதிபர் கமலேஸ்வரி பொன்னம்பலம் தலைமையில் நடை பெற்றபோது பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொண்ட முன்னாள் வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவி திருமதி கீதா விஜய தேவா (ஐக்கிய இராச்சியம்) மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குவதனையும், நிகழ்வின் விருந்தினர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியினரையும் காணலாம். (படம்:- பார்த்தீபன்)

# வறுமை நிலையே மாணவர்கள் கல்வியை தொடரமுடியாதுள்ளது

## - வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

வறுமையின் கொடுமையினால் பல மாணவர்கள் கற்பதற்கு விருப்பம் இருந்தும் கற்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது மிகவும் அவலம் தரும் விடயமாகும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான பணியகத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் இடம்பெற்றது.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான பணியகத்தின் தலைவர் பிரவீன் மகேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

வறுமை காரணமாக கல்வி கற்க வேண்டிய மாணவர்கள் பலர் தொழில் செய்து வருகின்றனர். இதனால் அவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இதுபோன்ற நிறுவனங்கள் வறுமையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி வழங்குவது பாராட்டத்தக்கது என்றார்.

தலைமை உரையாற்றிய பிரவீன் மகேஷ் தனதுரையில், 2004ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனம் பல்வேறு வகையிலான உதவிகளை வழங்கி வருகிறது. ஏழ்மை, வறுமை இவற்றை ஒழிப்பதே எமது நோக்கமாகும் என்றார்.

இந்நிகழ்வில் வைத்து ஐந்து கல்வி வலயங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 15 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள், துவிச்சக்கரவண்டிகள், சப்பாத்துக்கள் என்பன வழங்கப்பட்டன. (கா)

## உற்சவகாலத்தை முன்னிட்டு விசேடபோக்குவரத்து ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

ஆலய உற்சவத்தை முன்னிட்டு அங்கு சகல அத்தியாவசிய சேவைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளன.

குடிநீர், சுகாதாரம், போக்குவரத்து உட்பட சகல அத்தியாவசிய நடவடிக்கையும் நேற்றுடன் பூர்த்தியாகியுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு அமுதசுரபியில் அன்னதானமும் தினமும் வழங்க ஏற்பாடாகியுள்ளது.

அதேசமயம் குறிக்கட்டு வானுக்கும் நயினை இறங்கு துறைக்கும் இடையில் விசேட படகு சேவைகளும் மேலதிகமாக அமர்த்தப்பட்டுள்ளன. (வி)

## தொண்டைமானாறு பாலம் புனரமைப்பு துரித கதியில்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு பாலத்தை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் 160 அடி நீளமுடைய இந்த பாலத்தின் புனர்நிர்மாணப் பணிகளை துரித கதியில் மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாலத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு தேவையான பொருட்கள் தற்போது தெற்கில் இருந்து எடுத்துவரப்படுகின்றன என்று வீதிஅபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தொண்டைமானாறு வீதி அண்மையிலேயே மக்கள் போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டது.

ஆனால் சம்பந்தப்பட்ட பாலம் பெருமசேதப்பட்டுக் காணப்படுகின்றது. (வி)

## தற்செயல் நிவாரணம் பெறுவோர் விபரம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தற்செயல் நிவாரணம் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான கொடுப்பனவுக் காசோலைகள் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாக சமூக சேவை உத்தியோகத்தர் வி. அருந்த வராசா அறிவித்துள்ளார்.

இதில் பின்வருவோர் பிரதேச செயலகத்திற்கு சென்று பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

பெயர் விபரம் வருமாறு:

க.கணேசலிங்கம் (கல்வலை வீதி ,சண்டிலிப்பாய்), ம.ராசினி (சண்டிலிப்பாய்), இ.பாஸ்கரன் (வடலியடைப்பு), வ.தவராசா (சண்டிலிப்பாய்)ஐ.முத்துலிங்கம் (சண்டிலிப்பாய்), கோ. நந்தினி சண்டிலிப்பாய்), தே.வர்மலா (பண்டத்தரிப்பு), இ.ரேணுகா (சண்டிலிப்பாய் வடக்கு), வே. நாகேந்திரம் (சண்டிலிப்பாய் வடக்கு), தே. திலகவதி (சண்டிலிப்பாய் வடக்கு), இ.நாகேஸ் வரி (சண்டிலிப்பாய் வடக்கு), இ.வன்னியசிங்கம் (நவாலி வடக்கு), வ. செல்வம் (சண்டிலிப்பாய்), பு.பத்மாவதி (பண்டத்தரிப்பு),இ.சுதாநந்தினி (சில்லாலை வீதி) த.புஸ்பராணி (பண்டத்தரிப்பு), யா.லலிதா (பண்டத்தரிப்பு), இ. மலர் (சண்டிலிப்பாய்), க. பரமேஸ்வரி (சுதுமலை தெற்கு), ப.சிவமலர் (மானிப்பாய்). (104)

## குருநாகலில் நடைபெறவுள்ள சர்வமதக் கூட்டுறவுதின விழா

(யாழ்ப்பாணம்)

89ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின விழா இன்றும், நாளையும் குருநாகலில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து 180 கூட்டுறவாளர்கள் கலந்துகொள்வதற்காக இன்று காலை 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டப முன்றலிலிருந்து 3 அரச பேருந்துகளில் புறப்படவுள்ளனர்.

குருநாகல் வெலகெதர மைதானத்தில் நடைபெறவுள்ள முதலாம் நாள் இந்நிகழ்வு சுகாதார அமைச்சர் மைதிரிபால ஸ்ரீசேன தலைமையிலும், 2ஆம் நாள் நிகழ்வு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுகளில் கூட்டுறவு தின விழாவையொட்டி நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின்போது பண்டத்தரிப்பு, அச்சுவேலி, சாவகச்சேரி, பருத்தித்துறை, ஆகிய பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களினால் சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 4 வீடுகளுக்குரிய பத்திரங்கள் 4 கூட்டுறவாளர்களுக்கு ஜனாதிபதியினால் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# மணிபல்லவத்தில் மகத்துவம் பெருகும் கொடியேற்றப் பெருவிழா

ஈழத்திருநாட்டில் உள்ள புராதன சக்தி ஆலயங்களில் மிகவும் சிறப்புத் திருத்தலமாக விளங்குவது நயினை நாகபூசணி அம்பாளின் ஆலயமாகும். அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடமாக விளங்குகின்றது. அதுமட்டுமன்றி மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன ஒருங்கே அமையப் பெற்ற திருத்தலமாகும்.

### நாகபூசணி நாகம் பூஜித்த நாயகியாவாள்

நயினைப் பகுதியில் உறைந்தருளும் நாகபூசணியை நாகம் பூஜித்த வரலாறு அற்புதமானது. நாகபூசணி அம்பாளுக்கு நாகேஸ்வரி என்ற திருநாமமும் வழங்கப்படுகின்றது. நாகம் வழிபட்டதனால், நாகத்தால் பூஜிக்கப்பட்டதால் அன்னைக்கு இத் திருநாமம் அமைந்தது என்பர். இவ்வாறாக வழங்கி வரும் செவிவழிக்கதையை நோக்கும் பொழுது-

நாகமொன்று நயினாதீவுக்கு வடக்கேயுள்ள புளியந்தீவிலிருந்து நாள் தோறும் பூக்கள் கொண்டு வந்து நயினாதீவில் அம்மையை வழிபடுவதை தனது கடனாகக்கொண்டது. ஒரு நாள் பூக்கொண்டு அது வரும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்ல முனைந்தது. நாகம் அச்சம் அடைந்து கடல் நடுவில் இருந்த கல் ஒன்றிலே சுற்றிக்கொண்டது. கருடனோ மற்றொரு கல்லில் அமர்ந்த வண்ணம் நாகத்தைக் கொல்ல தருணம்பார்த்தது.

கடல் வழியாக மரக்கலம் ஒன்றிலே பண்டங்களை ஏற்றிவந்த வணிகர் ஒருவர் இக் காட்சியைக்கண்டார். பாம்பின் மீது இரக்கம் கொண்டான் “அதனைக் கொல்ல வேண்டாம்” என்று கருடனை வேண்டினார். கருடன் வணிகனைப்பார்த்து “நீ உனது செல்வம் அனைத்தையும் கொண்டு வந்து நாகேஸ்வரிக் கோவில் கட்டுவதாக உறுதி தந்தால் நான் இந்த நாகத்தைக் கொல்லாது சென்று விடுகிறேன்” என்றது. அவன் இவ்வாறே உறுதியளிக்க அது நாகத்தை கொல்லாது விலகிச் சென்றது.

வணிகனோ தனது நாடு சென்று நடந்தவற்றைத் தன்மனைவிக்கு உரைத்தான். இரவு நித்திரைக்குச் செல்கையில் கணவன் மனைவி இருவரதும் கண்களைக் கூச வைக்கும் பேரொளி அவர்களின் சயன அறையிலே தோன்றிற்று. அவர்களிருவரும் அவ் ஒளி எதுவாக இருக்கலாமென அதிசயப்பட்டனர். அது விலை மதித்தற்கரிய நாகரத்தினக் கல்லிலிருந்து வந்த ஒளி என்பதைக் கண்டு கொண்டார்கள் . நாகபூசணியின் நல்லருளை, அற்புதத்தை வியந்து நயினை தீவுக்கு வந்து அன்னைக்கு அழகியதோர் ஆலயம் அமைத்தார்கள்.

### கோயில் கருவறையில் சுயம்புருவாக விளங்கும் நாகமும் அன்னையும்.

நயினாதீவின் மூலஸ்தானத்தில் அம்மன் உருவம் போல் இருப்பது பழைய நாகப் பிரதிஷ்டையே. இது மிகவும் தேய்ந்த அம்மன் உருவம் போலத் தெரிகிறது. இதற்குப் பின்னால் ஐந்து தலை நாகப் பிரதிஷ்டை ஒன்று உண்டு. இந்த நாகச் சிலை புராதன பழமைச் சிறப்புக்களோடு தெய்வ சக்தியை பெருக்கி வருகின்றது. இத்தகு வரலாற்றுச் சிறப்புக்களோடு விளங்கும் நயினையெம்பதியில் பல்லாயிரக்கணக்கான அடியார்களோடு அன்னையின் கொடியேற்றப் பெருவிழா இன்று நடைபெறுகின்றது.

- செந்தமிழ் கலைஞானி மதுரகவி காரை.
எம்.பி.அருளானந்தன்.

# தென்மராட்சியில் மீள் எழுச்சித் திட்டம் விவசாயக் குளங்கள் புனரமைப்பு ஆரம்பம்



(கொழும்பு)

கமநல சேவைகள் திணைக்களத்தால் மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம் புனரமைக்கப்படவுள்ள குளங்கள் மற்றும் வாய்க்கால்களின் புனரமைப்புப் பணிகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெரின் (உதயன்) அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நேற்று ஆரம்பித்து வைத்துள்ளார்.

சாவகச்சேரி மறவன்புலோவில் அமைந்துள்ள பெரிய தூவில் குளத்தினை மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம் 4.9 மில்லியன் ‘ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இக்குளத்தின் புனரமைப்பு வேலையினை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெஜரின் (உதயன்) அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

இக்குளம் புனரமைப்பு செய்வதன் மூலம் 200 ஏக்கர் அளவில பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தனங்கிளப்பு தூக்குக் குளம் கீரைவாய்க்கால் 4.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புச் செய்யப் படவுள்ளதுடன் இவ் வாய்க்கால் அமைந்துள்ள மதகு ஒன்றிற்கான அடிக்கல்லினை நாட்டி புனரமைப்பு வேலைகளையும் பாராளுமன்ற உறுப்பினர் சில் வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி பிரதேச இணைப்பாளர் சாள்ஸ் ஈ.பி.டி.பி.யின் சாவகச்சேரி பிரதேச இணைப்பாளர் வலன்டைன் மற்றும் கமநல திணைக்கள அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வலி.வடக்கில் புதிய குளாய்க் கிணறுகள்

(கட்டுவன்)

RAP (ரப்) நிறுவனத்தினால் தெல்லிப்பளைப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஜே/223, ஜே/228, ஜே/226, ஜே/230, ஜே/231, ஜே/232, ஜே/236, ஜே/237 ஜே/244 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மொத்தமாக 21 குழாய்க் கிணறுகள் புதிதாக அமைக்கப் பட்டுள்ளது.

இதைவிட குறித்த நிறுவனத்தினால் வலி.வடக்குப் பிரதேசத்திலுள்ள சில வீதிகளை திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி ஜே/226 மேற்கு வீதி நகுலேஸ்வரம் (1.05 km) ஜே/231, மாவிட்டபுரம் அரசடி வீதி (1.3 km), ஜே/232 சந்தை வீதி (0.7 km), ஜே/230 தந்தை செல்வா வீதி (1.2km), ஜே/237, வீமன் காமம் தெற்கு (1.1 km), ஜே/223 வித்தகபுர கிராம சபை வீதி (1.2 km), ஜே/225 கொல்லன்கலட்டி, மாவைக்கலட்டி (2.3 km) ஆகிய கிராம அலுவலர பிரிவுகளிலுள்ள குறிப்பிட்ட தூர வீதிகள் புனரமைப்புச செய்யப் படவுள்ளதாகத் தெரிவிககப்படுகிறது.

இதேவேளை மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் குறிப்பாக பற்றைக்காடுகளாகக் காணப்பட்ட 30km தூரம் வரையான பிரதேசங்களின் துப்புரவுப் பணிகள் என்றிப் திட்டத்தினால் முன்னெடுக்கப்பட்டு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (22)

# தெல்லிப்பளைப் பிரதேச செயலகம் புனரமைக்க நடவடிக்கை

(கட்டுவன்)

வலி.வடக்குப் பிரதேச செயலகம், பனை அபிவிருத்திச் சபை, மற்றும் வலி.வடக்கிலுள்ள 9 ஆவது கூட்டுறவுச் சங்கக் கிளை என்பன புனரமைப்புச் செய்வதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இவற்றுக்கான நிதி கிடைத்ததும் உடனடியாக புனரமைப்பிற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (22)

# கிளிநொச்சி தொண்டமான் நகர் வீட்டுத்திட்டத்தில் புறக்கணிப்பு ஏன்?

## பொதுமக்கள் தெரிவிக்கும் ஆதங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, தொண்டமான் நகர் கிராமத்தில் மக்கள மீளக் குடியேறி நீண்ட நாட்களாகியும் இதுவரை நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்திலுள்ள மக்கள் நிரந்தர வீடுகள் இன்றி ஓலைக குடிசைகளிலும் தறப்பாழ்களினால் ஆன குடிசைகளிலும் பெரும் சிரமத்தின் மத்தியில் வாழந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாகக் கிளிநொச்சி மாவடடத்தில் பல்வேறு இடங்களில் வீட்டுத்திட்டங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு வீடுகள் அமைக்கப பட்டுள்ள நிலையில் தமது கிராமத்திற்கு ஏன் இந்தத் திட்டங்கள் வழங்கப்படவில்லை என இந்த மக்கள் ஆதங்கத்துடன் தெரிவிககின்றனர். எனவே இது தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்களும் வீடமைப்பு அதிகார சபையும் கவனமெடுத்துத் தமக்கு வீட்டுத் திட்ட வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(77)

# நோன்புகால விடுமுறை இரத்தாகும் சாத்தியம்

(முரசுமோட்டை)

முஸ்லிம் பாடசாலைகளுக்கு நோன்பு காலத்தில் வழங்கப்படும் விடுமுறையை இரத்துச் செய்வது குறித்து கல்வியமைச்சு ஆராய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

காலாகாலமாக முஸ்லிம் பாடசாலைகளுக்கு நோன்பு காலத்தில விடுமுறை வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையிலேயே கல்வியமைச்சு முஸ்லிம் பாடசாலைகளுக்கான இந்த நோன்புகால விடுமுறையை இரத்துச் செய்வது குறித்து ஆராய்ந்துள்ளது.

கல்வியமைச்சில் கடந்த புதன் கிழமை மாலை இதுகுறித்த முக்கிய கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது. கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெற்றுள்ள இக் கலந்துரையாடலில் முஸ்லிம் அமைச்சர்கள், எம்.பி.க்கள் ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர். எதிர்வரும் நாட்களில் இவ்விடயம் தொடர்பில் கல்வியமைச்சு உலமா சபை பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளது.

அதேநேரம் இத்திட்டத்திற்கு கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதிமேயர் ஆஸாத் சாலி தனது வரவேற்பை வெளிப படுத்தியுள்ளார்.

# வீதி விபத்து

நெல்லியடி மத்திய பகுதியில நேற்று நண்பகல் 12 மணியளவில் விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த பெண்மணி எதிரே துவிச்சக்கர வண்டியில் வந்துகொண்டிருந்த இளைஞனுடன் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் இதில் துவிச்சக்கர வண்டியின் முன்பாகம் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நெல்லியடிப் பொலிஸார் உடன் விஜயம் செய்து விசாரணையை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

## அதிகரிக்கும் மதுப்பாவனை யாழ்.பொலிஸாருக்கு கருத்தரங்கு

யாழப்பாணத்தில் மது மற்றும் புகைத்தல் பாவனையை விலக்குதலும் கட்டுப்படுத்தலும் என்ற தொனிப்பொருளில் பொலிஸாருககான கருத்தரங்கு நேற்றுக் காலை யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதிகரித்துவரும் மதுப்பாவனை மற்றும் புகைத்தல் போன்றவற்றினால் ஏற்படும் பாதிப்புகளை விழிப்புணர்வூட்டுவது மற்றும் இந்தப் பொருட்களின் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விடயங்கள் இந்தக் கருத்தரங்கில் பகிரப்பட்டது. இந்தக் கருத்தரங்கிற்கு மருத்துவர்கள், கொழும்பிலிருந்து ஊடகவியலாளர்கள், சுகாதாராக் குழுவினர், போதைப்பொருள தடுப்புப் பிரிவினர் என பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர்.

# ஆனைக்கோட்டை ஆலயத்தில் திருட்டு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை மூத்த நையினார் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற தேர்த்திருவிழாவின் போது திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதுடன் மேலும் ஒரு திருட்டுச் சம்பவம் முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஆலய திருவிழாவின போது குறிப்பாக அன்னதானத்திற்காகப் பெண் ஒருவர் தனது கைக்குழந்தையுடன் காத்திருந்த சமயம் அக்குழந்தையுடன் கையில் இருந்த காப்பைத் திருடர்கள் திருடிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குறித்த பெண அங்கு கடமையில் இருந்த பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததாகவும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த ஆலயத்திற்குள் வழிபாட்டில் ஈடுபட்ட பெண்ணின் கழுத்தில் இருந்த சங்கிலியைத் திருடர்கள் திருடிக்கொண்டு செல்ல முறபட்ட சமயம் அருகிலிருந்தவர்கள் கண்டு அவர்களை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

3 பெண்கள் இந்தத் திருட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் மூவரையும் பொலிஸார் அழைத்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் இவர்கள் வெளியூரைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (104)

## முருகபூபதி மணிவிழா

(கொழும்பு)

மெல்பேனில் வாழும் சமூக சேவையாளரும் தமிழ் இலக்கியவாதியுமான திருவாளர் லெட்சுமணன் முருக பூபதின் மணிவிழாவையொட்டி அவரது நண்பர்கள் அவரது சேவைகளை பாராட்டும் முகமாக எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை விருந்து நிகழ்சியை ஒழுங்கு செய்கிறார்கள். கடந்த இருபத்தி மூன்று ஆண்டுகளாக இலங்கையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகளை இலங்கை மாணவர் நிதியம் ஊடாக கல்விபெற ஊக்கு சக்தியாக இருந்து வருபவரும் மற்றும் அவுஸ்திரேலிய தமிழர் அகதிகள் கழகம் அவுஸ்திரேலிய தமிழர் ஒன்றியம் ஊடாக பல வருடங்களாக சேவையாற்றியவர் முருக பூபதி என்பது குறிப்பிடத்தக்கது.


## தேவையற்ற அதிகார...

வார்த்தைகள் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வடக்கில் வாழும் தமிழர்கள் அனாவசியமான அதிகாரங்களைக் கோராமல், இந்தியாவில் இருக்கும் அதிகாரப் பரவலாக்கல் மாதிரியை முன்னுதாரணமாகக்கொண்டு அதிகாரத்தை வழங்குமாறு கோராமல் சிங்களவர்களுடன் இணைந்து வாழத் தீர்மானிக்கவேண்டும்.

தென்னிலங்கை சிங்களவர்களும் வடக்கில் வாழும் தமிழர்களுடைய அழகான கலாசார அம்சங்களைப் புரிந்துகொண்டு, அவர்களின் தனித்தன்மையைப் புரிந்துகொள்ளவேண்டும். அரசாங்கம் வடக்கில் தேவையற்ற பிரச்சினைகளை மீண்டும் உருவாக்கப் பார்க்கின்றது. இல்லாத பிரச்சினைகளை மீண்டும் உருவாக்கி, அதனைவைத்து அரசியல் செய்வதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும். அதன் காரணமாகத்தான் வடக்கின் அரசியல்வாதிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு அங்கு மீண்டும் பயங்கரவாத சூழலொன்றை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

செய்திப்பாணம்

**முன்னாள் நகரசபை முன்னூறு மில்லியன் இன்றியும் மேலதிக இன்னுமோர் - முன்னூறு மில்லியன் கடனுடன் மறுபடியும் மீண்டெழுவே கய்வைக்க ஜனாதிபதி காண்!**



# இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வு நாடாளுமன்ற தெரிவுக்குழுவே வழங்கும்

## அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு காத்திரமானதொரு தீர்வை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினாலேயே வழங்கமுடியும் என பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறினார்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்காக நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைப் பகிஷ்கரிக்கப்போவதாக சில அரசியல் கட்சிகள் கூறிவருகின்றபோதும் இதற்கான காத்திரமான தீர்வை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால்தான் வழங்க முடியும் என அரசாங்கம் நம்புகின்றது.

தீர்வொன்று தேவையாக உள்ளது ஐரோப்பிய நாடுகளுக்கல்ல. வெளிநாட்டு அமைப்புக்களுக்கும் அல்ல. வடக்கு - கிழக்கில் உள்ள எமது மக்களுக்கே தீர்வொன்று தேவைப்படுகின்றது.

வடக்கையும், கிழக்கையும் பிரதிநிதிப்படுத்தும் சகல கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று நாடாளுமன்றத்தில் உள்ளனர். தமது மக்களின் தேவைகளை நன்கு அறிந்து வைத்துள்ள அவர்கள் தீர்வொன்றை எட்டுவதற்காக சுதந்திரமாக தமது கருத்தைத் தெரிவிக்க இப்போது அவகாசம் கிடைத்துள்ளது.

முன்னர் புலிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்து சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக்களை வெளியிடப் பயந்தனர். ஆனால், இன்று அந்த நிலை முற்றாக மாற்றப்பட்டுள்ளது. நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்ததன் மூலம் எமது ஜனாதிபதி அந்த நிலையை மாற்றியமைத்தார்.

இதன் காரணமாக மக்களின் சிந்தனைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

# இளைஞர்களுக்கான தொழில் பயிற்சி கிளிநொச்சியில் ஆரம்பம்

(கிளிநொச்சி)

தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையினால் 2 பயிற்சி நெறிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் ஆரம்பமாகவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இயங்கும் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையின் அலுவலகத்தில் நடைபெறும் இப்பயிற்சியில் அலுமினியம் பொருத்துதல், வீட்டு மின்னிணைப்பு ஆகிய பாடநெறிகள் தொடர்பாக பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சிகளில் இணைய விரும்புவோர் விண்ணப்பிக்குமாறு சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (69)

# மட்டக்களப்பில்; வங்கிக்கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புத்தூர் பாற்பண்ணை வீதியில் உள்ள அரச வங்கியொன்றினுள் புகுந்த இனம் தெரியாத ஆயுதக்குழுவினர் பணத்தையும், தங்க நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

வெள்ளைவானில் வந்த ஐவர் முகமூடி அணிந்து கையில் ரி56 ரக துப்பாக்கி வைத்திருந்ததாகவும் அவர்கள் வங்கி ஊழியர்களை அச்சுறுத்தி பணத்தையும் நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றதாகத் தெரியவருகிறது.

# இலங்கைக்கு இந்திய புகையிலை கடத்தல் முயற்சி முறியடிப்பு



(சென்னை)

ராமேஸ்வரம் தங்கச்சி மடம் அருகே அரியங்குன்று கடற்கரைக் கிராமத்தில் இருந்து இலங்கைக்கு உயர்தர புகையிலையைக் கடத்த முயன்ற இருவரை தமிழக கியூ பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

10 சாக்கு மூட்டைகளில் இருந்த 15 லட்சம் ரூபா மதிப்பிலான புகையிலையை கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கியூ பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

உயர்தர இந்திய புகையிலைக்கு சிங்கப்பூர், மலேசியா மற்றும் இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் அதிகளவில் கேள்வியுள்ளமை குறிப்பிடத்தக்கது

# வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம் நியாயப்படுத்த முடியாத கோரம்

## தமிழகப் பேராசிரியர் குமுறல்



(யாழ்ப்பாணம்)

வடக்கில், முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் மற்றும் காத்தான்குடி பள்ளிவாசல் சம்பவங்கள் தம்மை அதிகமாக பாதித்ததன் காரணமாக ஈழப் போராட்டத்திற்கு ஆதரவான தனது நிலைப்பாட்டை தான் கைவிட்டதாக பேராசிரியர் அப்துல்லாஹ் (பெரியார்தாசன்) தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அவர் ஊடகங்களுக்கு இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆரம்பகாலத்தில் நான் இலங்கையின் ஈழப் போராட்டத்திற்கு ஆதரவாக செயற்பட்டுவந்தேன். எனினும், தமிழ்க்குழு முஸ்லிம்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டபோது, நான் எனது நிலைப்பாட்டினையும் மாற்றிட நேர்ந்தது. வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம், காத்தான்குடி முஸ்லிம்களின் படுகொலை சம்பவங்கள் என்னை அதிகமாக பாதித்தது. இவை மனிதாபிமானத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரம். இவற்றை எவராலும் நியாயப்படுத்த முடியாது.

இக்கொடூரங்களைச் செய்தவர்களின் முடிவு நிச்சயமாக விரும்பத்தகுந்ததாக இருக்கப் போவதில்லை என நான் அப்போதே கூறினேன். அதுபோன்றே எல்லாம் நடந்தும் முடிந்தது. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது அதனை சைவப் புலவர்கள் நியாயப்படுத்தினர். ஆனால், நான் அந்தச் சம்பவங்களை வன்மையாக கண்டித்தேன். அதனை எவராலும் நியாயப்படுத்தவும் முடியாதென வாதிட்டேன்.

தமிழகத்தின் பல அரசியல் தலைவர்களிடம் வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம் குறித்து நான் அதிருப்தியை வெளியிட்டேன். ஆனால், அவர்கள் அதுபற்றி அலட்டிக்கொள்ளவில்லை. மனித நேயம் மிக்கவனென்ற முறையிலேயே நான் இச்சம்பவங்களை அன்றே கண்டித்தேன் எனவும் கூறியுள்ளார்

# வெளிநாடு செல்வோர்; தகவல் திரட்டப் புதிய பிரிவு

(கொழும்பு)

வெளிநாடு செல்வோர் பற்றிய தகவல் அறியும் உளவுப் பிரிவொன்றையும், காணாமல் போன கடவுச்சீட்டுகள் பற்றிய புள்ளிவிபரங்களை இணையத்தளம் மூலம் கோவைப்படுத்துவதற்கான புதிய பிரிவொன்றை அமைப்பதற்கும் அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் நேரடி பொறுப்பின் கீழ் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக சர்வதேச இடப்பெயர்வு அமைப்பின் முகாமைத்துவப் பிரிவின் தலைவரான சாந்த குலசேகர தெரிவித்தார்.

தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற இரண்டு நாள் பயிற்சி செயலமர்வின் போதே இத்தகவலை வெளியிட்டார்.

நாட்டின் எல்லைப் பாதுகாப்பை அதிகரித்து, பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதை தடுக்கும்முகமாக இத்திட்டம் அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இணையத்தளம் மூலம் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் சர்வதேச பொலிஸ் ஸ்தாபனமான இன்டர்போலின் உலகளாவிய புள்ளி விபரங்களை பெற்று, நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். அரசாங்கம் இத்திட்டத்தை இவ்வாண்டின் இறுதியில் நடைமுறைப்படுத்தவுள்ளது.

கனேடிய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இத்திட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த நடவடிக்கை செயற்பட ஆரம்பித்தவுடன் உலகெங்கிலுமுள்ள வெளிநாடு செல்பவர்களில் இரண்டு கோடிக்கும் கூடுதலானவர்களின் இரகசிய புள்ளிவிபர அறிக்கைகளும் அவர்களில் காணாமல் போனவர்களின் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையையும் ஒரு நொடிப்பொழுதில் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கும்.

போதைவஸ்து கடத்தல், சட்டவிரோத ஆயுத விற்பனை, பொருளாதார மோசடிகள், மக்களை ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு அழைத்து செல்லல் போன்ற பல்வேறு குற்றச்செயல்களை தடுப்பதற்கு இது உதவியாக இருக்கும்.

# கைத்தொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்கத் திட்டம்

(நல்லூர்)

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிலாளர்களின் கூட்டம் நேற்று நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ்.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் இ.ஸ்ரீதரன் வங்கிகள் வழங்கும் கடன்கள் மற்றும் கடன் தொடர்பான நடைமுறைகளைப் பற்றி விரிவாக விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில், சிறுகைத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், அவர்களுக்கான ஆலோசனைகளும் கைத்தொழில் அதிகாரசபை அதிகாரிகளினால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் ம.தவேந்திரன், கைத்தொழில் அபிவிருத்தி ஊக்குவிப்பு முகாமையாளர்களான தி.தனம், என்.நிறஞ்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (கா)

# வெளிநாட்டு நாணயங்கள் இலங்கையில் பயன்படுத்த அனுமதி

(கொழும்பு)

சீனாவின் யுவான் நாணயத்தை இலங்கை ஊடாக சர்வதேச நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த இலங்கை மத்திய வங்கி அனுமதியளித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு வசதிகளை மேம்படுத்தும் முகமாகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை மத்திய வங்கி மேலும் 13 நாடுகளின் வெளிநாட்டு நாணயங்களை சர்வதேச வங்கி நடவடிக்கைகளுக்காக இலங்கையில் பயன்படுத்தவும் அனுமதி அளித்துள்ளது.

இவற்றில் அவுஸ்திரேலிய டொலர், கனேடியன் டொலர், டொன்மார்க் க்ரோனர், யூரோ, ஹொங்கொங் டொலர், ஜப்பானிய யென், நியூசிலாந்து டொலர், நோர்வே க்ரோனர், ஸ்டெர்லிங் பவுண், சிங்கப்பூர் டொலர், சுவிஸ் பிராங்க் மற்றும் அமெரிக்க டொலர் என்பன அடங்கும்

## தீயணைப்புப் படையணி சேவை மேலும் விஸ்தரிப்பு

யாழ்.மாநகரசபை தனது தீயணைப்புப் படையணியின் சேவையை யாழ்.குடாநாடு முழுவதிற்கும் விஸ்தரித்துள்ளது. இதற்கான முன் ஏற்பாடுகள் அனைத்தும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக யாழ்.மாநகர சபைக்குப் புதிய தீயணைப்பு இயந்திரம் ஒருவாரத்திற்குள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் என நேற்று நடைபெற்ற மாநகர சபைக்கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

புதிய இயந்திரம் கிடைத்ததும மாநகரசபை எல்லைக்குள் மட்டுமன்றி குடாநாடு முழுவதும் எமது தீயணைப்பு சேவையை வழங்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

# யாழ். முஸ்லிம்கள் அனைவருக்கும் நிவாரணம்

(கொழும்பு)

வடமாகாணத்தில் மீள்குடியேற்றத்திற்காக தங்களைப் பதிவுசெய்த சகலருக்கும் உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கான அனுமதியை உலக உணவுத்திட்டம் யாழ்ப்பாண பிரதேச செயலாளருக்கு வழங்கியுள்ளதாக மௌலவி சுபியான் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றத்திற்காக தங்களைப் பதிவுசெய்து கொண்ட முஸ்லிம்கள் அனைவரும் யாழ். பலநோக்கு கூட்டுறவு சபைகளில் தமக்குரிய நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த 6 மாத காலமாக நிவாரண முத்திரை வழங்கப்பட்டும் எவ்வித நிவாரணமும், வழங்கப்படாதவர்களும் அண்மையில் நிவாரணத்திற்கான முத்திரை வழங்கப்பட்டவர்களும், மீள்குடியேற்றத்திற்காக பதிவு செய்யப்பட்டும் நிவாரண முத்திரை வழங்கப்படாதிருப்பவர்களும் இந்த நிவாரண உதவிக்குள் உள்வாங்கப்படவுள்ளதாகவும் மௌலவி சுபியான் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.